விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com






சங்கு 23
ஒலி 095 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 10 வியாழக்கிழமை (24.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

புலம்பெயர்ந்தவர்களுடன் கலந்துரையாடவுள்ளேன்

# வடக்கில் முதலிட முன்வாருங்கள்

## அமெரிக்க தூதுவருடனான சந்திப்பில் ஜனாதிபதி



(கொழும்பு)

புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்த தான் ஆர்வமாக உள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, வடமாகாணத்தின் அபிவிருத்தியில் முதலீடு செய்யுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் குறிப்பிட்டார். (15ஆம் பக்கம் பார்க்க)

# நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு தற்போது எதிர்கொண்டு வரும் நெருக்கடிக்கு தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதில் உறுதியாக இருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் தெரிவித் 15

# புத்தாண்டுக்கு முன்னதாக மக்களுக்கு நிவாரணம்

## புதிய பாதீடு முன்வைக்கப்படும்

### சர்வகட்சி மாநாட்டில் பசில்

(கொழும்பு)

சித்திரை புத்தாண்டுக்கு முன்னதாக மக்களுக்கு நிவாரணங்கள் பலவற்றை வழங்க நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ இணக்கம் 15

# நெருக்கடிக்கு தீர்வுகாண அனைவரும் ஒன்றிணைக

## சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி கோட்டா



(கொழும்பு)

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறுகியகால மற்றும் நீண்டகால உத்திகளை முன்னெடுப்பதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். (15ஆம் பக்கம் பார்க்க)

## பெறுமதிசேர் வரியை அதிகரிக்க அனுமதி

(கொழும்பு)

பெறுமதிசேர் வரிச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய கடந்த 15

## ராஜபக்ஷ அரசு விரைவில் கவிழும்

### உதய கம்மன்பில

(கொழும்பு)

ராஜபக்ஷ அரசு விரைவில் கவிழும் என்று புதிய ஹெல உறு மயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன் பில எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் 15

சர்வகட்சி மாநாட்டில்

## ரணிலிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோரிய ஜனாதிபதி

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி கோட்டா பகிரங்கமாக மன்னிப்பு கோரியுள்ளார்.

நேற்றைய சர்வகட்சி மாநாட்டில் உரையாற்றிய இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் 15

## ரணில் எழுப்பிய கேள்விகளால் நிலை தடுமாறினார் பசில்

### கோட்டா முன்னிலையில் சர்வகட்சி மாநாட்டில் சுவாரஸ்யம்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி நாடுவது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்வியால் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தடுமாறியுள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி 15

## '74 வருட சாபத்துக்கு முற்றுப்புள்ளி'

### அரசுக்கு எதிராக ஜே.வி.பி பாரிய போராட்டம்



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக ஜே.வி.பி நேற்று பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

"74 வருட சாபத்திற்கு முற்றுப்புள்ளி" என்னும் தொனிப்பொருளிலே இவ் எதிர்ப்பு 15

## மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துக

### அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

ஜனநாயகத்தை உறுதிசெய்ய மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலர் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கர்ப்பவதி மனைவிக்காக

# பலாப்பழம் பறித்த இளைஞன் படுகொலை

(கொழும்பு)

தென்னிலங்கையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாக கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கர்ப்பவதியான மனைவியின் ஆசையை நிறைவேற்று வதற்காக பலாப்பழம் ஒன்றை பறித்த குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனது உறவினர் ஒருவரின் வளவிலுள்ள தோட்டத்தில் பலாப்பழம் பறித்தமையினால் இந்த கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் வடக்கு எல்பிட்டிய, எகொடகெதர பகுதியைச் சேர்ந்த 34 வயதான கே.எம்.ஷெஹான் லசந்த என்பவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

### குப்பிழானிலுள்ள நீச்சல் தடாகத்தில்

# தவறிவிழுந்த இளைஞன் பலி



குப்பிழான் வடக்கு வீரபத்திரர் கோயிலடியில் வீட்டு வளவினுள் அமைந்துள்ள நீச்சல் தடாகமொன்றில் நீந்தியபோது தவறி விழுந்து படுகாயமடைந்த இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் தனது நண்பர்கள் சிலருடன் இணைந்து குறித்த நீச்சல் தடாகத்தில் நீந்திக்கொண்டிருந்த குறித்த இளைஞன் நீந்திவிட்டு எழும்பி வெளியே வர முயற்சித்தபோது தவறி விழுந்து தலையின் பின்பக்கத்தில் அடிபட்டுப் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் குப்பிழானைச் சேர்ந்த உதயகுமார் நிரோசன் (வயது-33) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-18)

### தமிழகத்திற்கு இடம்பெயர்ந்தவர்களின்

# உறவினர்கள், நண்பர்களுக்கு கடற்படையினர் அச்சுறுத்தல்

(மன்னார்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக இலங்கையில் இருந்து நேற்று முன்தினம் 16 பேர் இடம்பெயர்ந்தனர்.

மன்னார் பகுதியை சேர்ந்த இரு குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு இடம்பெயர்ந்தனர். இந்நிலையில் அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர் வீட்டுக்கு சிவில் உடையில் சென்ற கடற்படையினர் அச்சுறுத்தும் விதமாக செயற்பட்டதுடன் அப்பெண்ணின் தந்தையையும் தாயையும் கைது செய்ய முற்பட்டுள்ளனர்.

அதே நேரம் தொடர்ந்து விசாரணை என்ற போர்வையில் அனேகர் வீட்டுக்கு வருவதாகவும் உரிய சீருடை அடையாள அட்டைகள் இன்றி அச்சுறுத்தும் விதமாகவும் கொலை, கடத்தல் போன்ற குற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள் போல தங்களை அச்சுறுத்தும் விதமாகவும் விசாரணைகள் மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த அச்சுறுத்தல்கள் மற்றும் விசாரணைகள் தொடரும் பட்சத்தில் தாங்கள் பொலிஸிலோ அல்லது மனித உரிமை ஆணைக் குழுவிலோ தான் தஞ்சம்புக வேண்டிய சூழல் ஏற்படும் என பாதிக்கப்பட்ட பெற்றோர் தெரிவித்துள்ளனர். (ம-285)


## வேலையாட்கள் தேவை

கொக்குவிலில் இயங்கும் ரெஜிபோம் டிசைனிங் நிறுவனம் ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் உடன் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
(கொக்குவிலுக்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.) (க)

075 039 4357
077 039 4359



## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



விண்ணக வாழ்வில் 07.04.2018

அமரர்

**திருமதி சிவகுமார் பராசக்தி**

( ஓய்வுநிலை அதிபர் – நல்லூர் ஞானோதய வித்தியாலயம் )

திதி – ஸப்தமி (24.03.2022)

நான்காண்டுகள் கரைந்தோடினாலும்
ஆறவில்லை எம் நெஞ்சம்
உங்கள் நினைவுகள் மட்டுமே
பொக்கிஷமாய்
காலமெல்லாம் எம்முடன்....

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

வ. சிவகுமார்
இல. 124, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(10759)
021 221 6790



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.12.1951

மறைவு 04.04.2021

கடந்த 04.04.2021 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**வேலுப்பிள்ளை தர்மலிங்கம்**

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திக் கிரியைகள் நாளை (25.03.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"ராணி பவன்"
கம்பர்மலை, வல்வெட்டித்துறை,
உடுப்பிட்டி வடக்கு.
(C-4644)
021 226 5479 குடும்பத்தினர்



## Our Farmers (PVT) Ltd - உழவர்

கீழ்வரும் அங்காடி கிளைகளுக்கு தகுதியான வேலையாட்கள் உடன் தேவை.

பல்பொருள் அங்காடி கிளைகள்

- மருதனார்மடம்
- திருநெல்வேலி
- ஊரெழு கிழக்கு
- அச்சுவேலி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கிளிநொச்சி

❑ மேலாளர் : ஆண்
5 ஆண்டுகளுக்கும் மேலான சந்தைப்படுத்தல் அனுபவம் மொத்த மற்றும் சில்லறை வணிகம், வயது வரம்பு : 30 - 45, சம்பளம் : நேர்காணல்

❑ உதவி கள மேலாளர் : ஆண்
5 ஆண்டுகளுக்கும் மேலான சந்தைப்படுத்தல் அனுபவம் மொத்த மற்றும் சில்லறை வணிகம், வயது வரம்பு : 30 - 45, சம்பளம் : நேர்காணல்

❑ கணக்காளர்/ ஆடிட்டர் : பெண்/ ஆண்
3 வருடங்களுக்கும் மேலான் அனுபவம்
தகுதி : HNDA டிப்ளோமா/ பட்டம்
திறன்: விரைவு புத்தகத்தில் அனுபவம்
வயது வரம்பு: 25 - 45 சம்பளம் : நேர்காணல்

❑ காசாளர் : ஆண்/ பெண்
3 வருடங்களுக்கும் மேலான அனுபவம் பல்பொருள் அங்காடி
தகைமை : க.பொ.த உயர்தரம், நல்ல ஆங்கில அறிவு & கணினி அறிவு
வயது வரம்பு : 30-45 சம்பளம் : நேர்காணல்

❑ விற்பனை பெண்/ஆண்கள்
3 வருடங்களுக்கும் மேலான அனுபவம் பல்பொருள் அங்காடி
தகைமை : GCE O/L, நல்ல ஆங்கில அறிவு & கணினி அறிவு, தொடர்பாடல் திறன்.
வயது வரம்பு : 25 - 45 சம்பளம் : நேர்காணல்

உங்கள் சுயவிபரக் கோவையினை கீழ்வரும் இணையத்தளத்தில் பதிவு செய்யுங்கள்.

Applications : info@our-farmers.lk

(10753)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத தடைச்சட்டம் சிங்களவர் பக்கமும் திரும்பும்

# திலீபன் ஒரு தீர்க்கதரிசி

# அன்று அவர் சொன்னது இன்று பலித்துத்துவிட்டது

## பாராளுமன்றில் விஜித ஹேரத் எடுத்துரைப்பு





**(கொழும்பு)**

**பயங்கரவாதத் தடைச்சட்டம் வடக்கில் உள்ளவர்களை மட்டுமல்ல தெற்கில் உள்ளவர்களையும் அடக்கி ஒடுக்கும் என விடுதலைப்புலிகளின் உறுப்பினர் தியாகி திலிபன் அன்று எதிர்வு கூறியது இன்று நிறைவேறியுள்ளது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் இதனை அவர் நினைவு கூர்ந்தார். மேலும் பயங்கரவாதச் சட்டம் தமிழர், முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல இறுதியில் சிங்களவருக்கு எதிராகவும் பயன்படுத்தப்படும் என்பதனை அவரது தியாகம் மூலம் புரிந்து கொண்டோம் என அவர் தெரிவித்தார்.

திலிபன் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் போது முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகளில் ஒன்றான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட வேண்டும். என்பது ஒரு கோரிக்கை ஆகும். தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் 12 நாட்கள் உண்ணாவிரத மிருந்து அவர் உயிர் நீத்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இந்தியா... சீனாவை அடுத்து அவுஸ்திரேலியாவிடம் கடன் கோரும் இலங்கை

(கொழும்பு)

பால்மா, பருப்புமற்றும்உணவு உற்பத்திக்காக அவுஸ்திரேலியாவிடம் கடன் கோரப்பட்டுள்ளது.

200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன கடனாக கோரியுள்ளார். (நி-5)

## 300 ரூபாவை எட்டியது டொலரின் பெறுமதி

(கொழும்பு)

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 285 ரூபா முதல் 290 ரூபா வரை அதிகரித்துள்ளது.

நாட்டிலுள்ள வர்த்தக வங்கிகளில் நேற்றைய நாணய மாற்று விகிதத்தின் பிரகாரம் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வங்கிகள் அற்ற ஏனைய நாணய மாற்று நிலையங்களில் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 309 ரூபா வரை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தனிச்சட்டமாக்குவதில் வீரசேகர தீவிரம்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டம் நாட்டுக்கு மிக அவசியமானது. தற்போது அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் எதிர்காலத்தில் அது இன்னும் பல திருத்தங்களுடன் முழுமையான சட்டமாக கொண்டு வரப்பட வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்)



திருத்தச் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

1979 ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன விடுதலைப்புலி பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொண்டு வந்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள பழைய சட்டத்தில் திருத்தம் மட்டுமே கொண்டு வரப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் பயங்கரவாத தடைச் சட்டங்களைப் பார்த்து இதில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தனியான சட்டமாக இது கொண்டு வரப்பட வேண்டும் என சரத்வீரசேகர தெரிவித்தார். (நி-5)

## பயங்கரவாத தடைச்சட்டத்தின் பாதகத் தன்மை சிங்கள மக்களுக்கு புரியாது

### ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிங்கள மக்கள் யாரும் கைதுசெய்யப்படாததால் அதன் பாதகத் தன்மை சிங்கள மக்களுக்கு தெரியாது என எதிர்க் கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த சட்டம் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த ஏற்படுத்தப்பட்டாலும் தற்போது பல்வேறு பழிவாங்கல்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன் இந்த சட்டத்தின் கீழ் சிங்களம், தமிழ், முஸ்லிம் என யார் கைதுசெய்யப்பட்டாலும் அவர்களின் மனித உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான தமிழ் முஸ்லிம் மக்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு சிங்களவரேனும் இந்த சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறைப்படுத்தவில்லை என்றே நினைக்கின்றேன். அதனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் பாதக நிலைமையை சிங்கள மக்களுக்கு உணர்ந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது.

இது சாதாரண சட்டம் என்றே சிங்கள மக்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர் என அவர் தெரிவித்தார். (நி-5)

## ஜனாதிபதிக்கு ஆணை வழங்கிய மக்கள் அவரை பதவி விலகுமாறு கூறவில்லையாம்

### சகோதரன் பசிலின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

"இந்த நாட்டின் சிறந்த தலைவரே கோட்டாபய ராஜபக்ஷ. தற்போதைய நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை அவர் மீட்டே தீருவார். பதவி விலகும் எண்ணம் அவருக்கு இல்லை" என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு எதிர்க்கட்சிகளும், எதிர்க் கட்சிகளின் ஆதரவாளர்களுமே கோருகின்றனர். ஜனாதிபதிக்கு ஆணை வழங்கிய மக்கள் எவரும் அவரைப் பதவி விலகுமாறு கோரவில்லை.

இந்த நாட்டை முன்னேற்ற ராஜபக்ஷ சகோதரர்கள் ஓரணியில் பயணிக்கின்றனர். எமது பயணம் வெற்றியடைய ஆளுந்தரப்பில் உள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்" என அவர் தெரிவித்தார். (நி-5)

## மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் யாழ்.நகரில் பேரணி

(யாழ்ப்பாணம்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் கவனயீர்ப்பு பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பித்த பேரணி




யானது வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் முடிவடைந்தது. அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும், காணிகளை விடுவியுங்கள், இந்திய இழுவைமடி படகுகளை தடுத்து நிறுத்து போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் இடம்பெற்றது. (4-5-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூர் அணியை டு பிளசிஸிஸ் சிறப்பாக வழிநடத்துவார்

## கோலி நம்பிக்கை




15 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நாளை மறுதினம் மும்பையில் ஆரம்பமாகிறது. தொடக்க ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ்- கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன. இதில் பங்கேற்கும் 10 அணிகளில் ஒன்றான பெங்களூரு றோயல் சேலஞ்சர்ஸ் அணி பாப் டு பிளசிஸ் தலைமையில் களம்இறங்குகிறது. கப்டன் பதவியில் இருந்து ஒதுங்கிய நட்சத்திர பட்ஸ்மேன் விராட்கோலி அணி யுடன் இணைந்து பயிற்சியை தொடங்கியுள்ளார். அவர் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது,

ஐ.பி.எல். ஏலத்தில் அனுபவ வீரர் டுபிளசிஸ் எடுப்பது என்ற திட்டத்தில் தெளிவாக இருந்தோம். வீரர்கள் ஓய்வறையில் நாங்கள் மிகவும் மரியாதை அளிக்கும் ஒரு தலைவர் தேவை. அதாவது கட்டளை போடும் வீரர் கப்டனாக வேண்டுமே தவிர, கோரிக் கைகள் வைக்கும் தலைவர் அல்ல. அவர் தென்ஆப்பிரிக்க அணியின் டெஸ்ட் கப்டனாக இருந்துள்ளார். நிறைய சாதித்துள்ளார். அவர் பெங்களூரு அணியை வழிநடத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். நிச்சயம் இந்த பணியை மிகச்சிறப்பாக செய்வார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடங்கி இவ்வளவு தூரம் வந்திருப்பது நம்ப முடியாத ஒன்று. நான் தற்போது புத்துணர்ச்சியுடன் இங்கு திரும்பி இருக்கிறேன். ஏனெனில் பொறுப்பு மற்றும் கடமைகளில் இருந்து விலகி உள்ளேன்.

என்னுடைய வாழ்க்கையை மிகவும் நேசிக் கிறேன்.அதே சமயம் எனக்கு பிடித்த கிரிக்கெட்டையும் விளையாடுகிறேன். நான் என்ன செய்ய வேண்டும் என்பதில் துல்லியமாக இருக்கிறேன்.

களத்தில் எப்போதும் போல் விளையாடி அணிக்கு முழு பங்களிப்பை அளிப் பேன் என தெரிவித்தார். (4-6)

# 25 வயதில் ஓய்வுபெறும் டென்னிஸ் வீராங்கனை




டென்னிஸில் இருந்து ஓய்வு பெறுவதாக உலகின் முதல்நிலை வீராங்கனையான 25 வயதான ஆஷ்லே பார்ட்டி அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட முறையில் பல கனவுகள் உள்ளதாகவும், ஆனால் உலகம் முழுவதும் சுற்றி தனது குடும்பத்தையும் சொந்த ஊரையும் பிரிந்து இருக்க தன்னால் முடியாது என்றும் கூறியுள்ளார்.

மேலும் டென்னிஸ் விளையாட்டை தான் மிகவும் நேசிப்பதாகவும், தனது வாழ்வில் அது என்றும் ஒரு அங்கமாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

தனது வாழ்வின் அடுத்த பகுதியை ஒரு விளையாட்டு வீராங்கனையாக இல்லாமல், ஒரு சாதாரண நபராக அனுபவிக்க விரும்புவதாக ஆஷ்லே பார்ட்டி தெரிவித்துள்ளார். (4-6)


## அரசாங்க அறிவித்தல்

## பகிரங்க ஏலவிற்பனை

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணனிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 1.00 மணிவரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏலவிற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் - பருத்தித்துறை | 28/03/2022 திங்கட்கிழமை | மு.ப. 09.30 | பி.செ பருத்தித்துறை |
| 02 | பிரதேச செயலகம் - கரவெட்டி | 28/03/2022 திங்கட்கிழமை | மு.ப. 11.00 | பி.செ கரவெட்டி |
| 03 | பிரதேச செயலகம் - தெல்லிப்பளை | 29/03/2022 செவ்வாய்க்கிழமை | மு.ப 09.30 | பி.செ தெல்லிப்பளை |
| 04 | பிரதேச செயலகம் - உடுவில் | 29/03/2022 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.30 | பி.செ உடுவில் |
| 05 | பிரதேச செயலகம் - கோப்பாய் | 29/03/2022 செவ்வாய்க்கிழமை | மு.ப 11.30 | பி.செ கோப்பாய் |
| 06 | பிரதேச செயலகம் - காரைநகர் | 30/03/2022 புதன்கிழமை | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 07 | பிரதேச செயலகம் - சங்கானை | 30/03/2022 புதன்கிழமை | மு.ப 10.30 | பி.செ சங்கானை |
| 08 | பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய் | 30/03/2022 புதன்கிழமை | மு.ப 11.30 | பி.செ சண்டிலிப்பாய் |
| 09 | பிரதேச செயலகம் - நெடுந்தீவு | 30/03/2022 புதன்கிழமை | பி.ப 02.00 | பி.செ நெடுந்தீவு |
| 10 | பிரதேச செயலகம் - மருதங்கேணி | 31/03/2022 வியாழக்கிழமை | மு.ப 09.30 | பி.செ மருதங்கேணி |
| 11 | பிரதேச செயலகம் - நல்லூர் | 31/03/2022 வியாழக்கிழமை | மு.ப 11.30 | பி.செ நல்லூர் |
| 12 | பிரதேச செயலகம் - வேலணை | 01/04/2022 வெள்ளிக்கிழமை | மு.ப 09.30 | பி.செ வேலணை |
| 13 | பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை | 01/04/2022 வெள்ளிக்கிழமை | மு.ப 11.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 14 | பிரதேச செயலகம் - சாவகச்சேரி | 04/04/2022 திங்கட்கிழமை | மு.ப 09.30 | பி.செ சாவகச்சேரி |
| 15 | பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம் | 04/04/2022 திங்கட்கிழமை | மு.ப 11.00 | பழைய யாழ்ப்பாணப் பிரதேச செயலக கட்டடம் (சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக) |
| 16 | தகவல் தொழிநுட்பபூங்கா- யாழ்ப்பாணம் | 05/04/2022 செவ்வாய்க்கிழமை | மு.ப. 09.30 | தகவல் தொழிநுட்ப பூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க கட்டடம் |
| 17 | மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம் | 05/04/2022 செவ்வாய்க்கிழமை | மு.ப 11.00 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

க.மகேசன்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்

(C-4043)


# மக்கள் பட்டினியால் வாடும் நிலை உருவாகியுள்ளது

## சர்வகட்சி மாநாட்டில் சுமந்திரன் எம்.பி

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான பொதுப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும், பட்டினியில் வாடும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடியால், மக்கள் பட்டினியில் வாடும் நிலை உருவாகியுள்ளது. வடக்கில் இருந்து ஒரே நாளில் 16 பேர் தமிழகம் சென்றுள்ளனர்.

இந்நிலைமை தொடரக்கூடாது. தற்போதைய நிலைமையில் இருந்து மீள்வதற்கான பொறிமுறை அவசியம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ம)

# கொரோனா தொற்றால் மேலும் 5 பேர் மரணம்

(கொரோனா)

நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 16 ஆயிரத்து 445 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மேலும் 5 பேர் கோவிட் தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16,445 ஆக அதிகரித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் இலங்கை

# இந்த நிலை நீடித்தால்

## தமிழகம் வருவோர் தொகை அதிகரிக்கும்

## சென்னையில் சிவாஜி

**(சென்னை)**

**இலங்கையில் பொருளாதார சிக்கல் நீடித்தால், இந்தியாவிற்கு வரும் தமிழ் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று இலங்கையின் முன்னாள் எம். பி. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் விலைவாசி விஷமென விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளது. ஒரு கிலோ பச்சை மிளகாய் ஆயிரம் ரூபாய் ஒரு கிலோ முருங்கைக்காய் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய். இதுபோன்று அனைத்து காய்கறி விலையும் அதிகரித்துள்ளது.

1/2 கிலோ பால்பவுடர் தொள்ளாயிரம் ரூபாய். சமையல் காஸ் சிலிண்டர் ஐயாயிரம் முதல் பத்தாயிரம் ரூபாய் வரை கொடுத்தாலும் கிடைப்பதில்லை.

இலங்கையில், 90 சதவீத பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் நிலையில், டொலர் கையிருப்பு இல்லாததால் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாமல் தவிக்கிறார்கள். இலங்கை அரசாங்கம் தற்போது தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளது. இன்னும் மோசமடையத்தான் வாய்ப்பு உள்ளது. மீண்டு வர வாய்ப்பு இல்லை. தொடர்ந்து பொருளாதார சிக்கல் நீடித்தால் இலங்கை தமிழ் மக்கள் தமிழகம் வரும் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இலங்கை படைகளின் கெடுபிடி அதிகமாக இருப்பதால், முன்பு போல் ஆயிரக்கணக்கில் வரமுடியவில்லை.

மக்கள் வர விரும்பினாலும்



தடைகள் இருக்கிறது. பட்டினி கிடந்து சாவதை விட, நடுக் கடலில் சுட்டுக்கொன்றாலும் பரவாயில்லை எனத் தமிழ் மக்கள் நினைக்கிறார்கள் என அவர் தெரிவித்தார். (நி-5)

## விசா கட்டணத்தில் திருத்தம்


(கொழும்பு)

விசா கட்டணத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

டொலருக்கு நிகரான தற்போதைய ரூபாயின் பெறுமதியின் ஏற்ற இறக்கம் காரணமாக இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அமெரிக்க தூதரகம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் விசா மற்றும் ஏ.சி.எஸ் சேவை கட்டணங்கள் திருத்தம் செய்யப்படும் என அறிவித்துள்ளது. (4-5)

## பெருந்தோட்ட அமைச்சின் ஆவணங்களை பாராளுமன்றில் கிழித்தெறிந்த வடிவேல் சுரேஷ்



(கொழும்பு)

மலையக மக்களின் காணி பிரச்சினைகள் தொடர்பாக நேற்று பாராளுமன்றில் இடம் பெற்ற விவாதத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ், பெருந்தோட்ட அமைச்சு அனுப்பிய ஆவணங்களை கிழித்தெறிந்தார்.

மலையக மக்களின் காணியுரிமைகள் மறுக்கப்படுவதாக கூறியே அவர் குறித்த ஆவணங்களை கிழித்தெறிந்தார்.

இந்த பிரச்சினைகள் காரணமாக மலையக இளைஞர்களை ஆயுதமேந்த வைக்க வேண்டாம் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (நி-5)

## போதியளவு பெற்றோல் கையிருப்பில் காத்திருப்பு தேவையில்லை-சுமித் விஜேசிங்க

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் பெற்றோலுக்காக வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படாது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் போதிய பெற்றோல் கையிருப்பு இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருந்த போதிலும் சில பகுதிகளில் பெற்றோலுக்கான நீண்ட வரிசைகள் நேற்று முன்தினமும் காணப்பட்டன. இது தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரிடம் வினவியபோது, மேலும் ஒரு மாதத்திற்கு போதுமான அளவு பெற்றோல் கொள்வனவுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது பெற்றோல் மற்றும் டீசல் அடங்கிய மூன்று கப்பல்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் இருப்பதாகவும் அதில் இரண்டு கப்பல்களில் இருந்து பெற்றோல் மற்றும் டீசல்கள் இறக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது நாட்டில், 8500 மெட்ரிக் டொன்னுக்கும் அதிகமான எரிபொருட்கள் நாளாந்தம் பயன்படுத்தப்படுவதாக வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். ஆனால், இது போதுமான அளவில் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்திய கடன் உதவியின் கீழ் எரிபொருளை ஏற்றிய மற்றுமொரு கப்பல் துறைமுகத்தை வந்தடையவுள்ளது. போதியளவிலான மண்ணெண்ணெயை விநியோகிக்குமாறு தாம் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார். (நி-5)

# இராசிபலன்

**24.03.2022**
**பங்குனி 10, வியாழக்கிழமை**
**சப்தமி பின்னிரவு 1.39 மணிவரை**

**கேட்டை முன்னிரவு 6.54 மணிவரை**
**சுபநேரம்- 7.46-9.16 மணிவரை**
**இராகுகாலம் -1.46-3.16 மணிவரை**

**உலக காச நோய் எதிர்ப்பு நாள்**
**சந்திராஷ்டமம்-**
**பரணி, கார்த்திகை**

**வளவன்**

**மேஷம்** — உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் வளர்ச்சி காணும் நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**கடகம்** — தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**துலாம்** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**மகரம்** — வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள்.

**ரிஷபம்** — நன்மைகள் நடைபெறும் நாள், கடன் தொல்லைகள் குறையும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும் நாள்.

**சிம்மம்** — உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**விருச்சிகம்** — வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** — திட்டமிட்ட காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** — வியாபார விருத்தியுண்டு, கனவு பலிதமுண்டு, செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** — உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், செல்வ நிலை உயரும் நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம்.

**தனுசு** — இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மீனம்** — எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி விடும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணையலாம்.


**திடமான உடலில் தான் திடமான மனம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தலைவாசல் இராஜகோபுரக் கும்பாபிஷேகம் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. மேற்படி ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ க. செந்தில்ராஜக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் இராஜகோபுரக் கும்பாபிஷேக கிரியைகளை நிகழ்த்தினர். (படங்கள்:-ரவிசாந், சிவசாந்தன்)

# மரபுரிமைச் சின்னங்களை காட்சிப்படுத்தலும் ஆவணப்படுத்தலும் கண்காட்சி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

தொல்லியல் திணைக்களம் மற்றும் மத்திய கலாசார நிதியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண கோட்டையில் கிடைக்கப்பெற்ற மரபுரிமைச் சின்னங்களை காட்சிப்படுத்தலும் ஆவணப்படுத்தலும் கண்காட்சி நேற்று முன்தினம் யாழ்ப்பாணக் கோட்டை வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த கண்காட்சியினை இலங்கைக்கான நெதர்லாந்து நாட்டின் தூதுவர் ரஞ்சா கொங்றிவிப் ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் ஓய்வு பெற்ற வரலாற்று துறை பேராசிரியர் ப. புஷ்ப ரட்ணம், யாழ்.மாநகர முதல்வர், வி. மணிவண்ணனுடன் தொல்பொருள் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட செயற்திட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-5-18-33-104)



# தணியாத மண்ணெண்ணெய் வரிசை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பகுதியில் உள்ள புறாப்பொறிக்கி, நெல்லியடி, மந்திகை, ஓராங்கட்டை ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெட்ரோல், மற்றும் டீசல் என்பன தீர்ந்துள்ளன.

மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மட்டும் மண்ணெண்ணெய் விநியோகம் இடம் பெறுகிறது, மண்ணெண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு மக்கள் நீண்டவரிசையில் நின்று பெற்றுச் செல்கின்றனர்.

இதே வேளை நெல்லியடி கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தமது விற்பனை நிலையங்கள் ஊடாக பங்கீட்டு அட்டைக்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெயை வழங்கி வருகிறது. மேலும் யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒரு குடும்ப பங்கீட்டு அட்டைக்கு ஐந்நூறு ரூபாய் பெறுமதியான மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.(4-5-33-60-104)

# வலி.கிழக்கு தவிசாளர் சாவ. உப தவிசாளர்

## விசாரணைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்தினை திறந்து வைத்த நிலையில், அங்கு காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார்களுடன் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரிவித்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செ.மயூரன் ஆகியோரை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

இன்று காலை 9 மணிக்கு நுணாவிலில் உள்ள சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைகளுக்காக சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகள் நினைவுப் பேருரை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தின் முதல்வரும், அமெரிக்காவின் ஹாவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்தவருமான ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் "யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளும், சர்வதேசத்தில் அவரது சிந்தனைப் பரவலாக்கமும்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரையாற்றவுள்ளார். (4-5-33)



வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, கொச்சிக்கடை லயன்ஸ் கழகத்தால் யாழ். போதனா மருத்துவமனை புற்று நோய் பிரிவுக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான நவீன உபகரணத் தொகுதி நேற்று வழங்கி வைக்கப்பட்டது. (படம்:-மகாலிங்கம்)

# புத்தக அரங்கப் பெருவிழா

(குப்பிழான்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் "நூறு மலர்கள் மலரட்டும்" எனும் தலைப்பிலான புத்தக அரங்கப் பெருவிழா 25, 26, 27 ஆம் திகதிகளில் இல- 62, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி எனும் முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும் எழுத்தாளருமான க.தணிகாசலம் தலைமையில் இடம் பெறும். (5-4-18)

# வவுனியாவில் காச நோயினால் இரு வருடங்களில் 15 பேர் பலி

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் கடந்த இரு வருடங்களில் காச நோயினால் 99 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 15பேர் மரணமடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு மருத்துவ அதிகாரி கே.சந்திர குமார் தெரிவித்தார்.

நேற்று வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலக காசநோய் தினம் இம்முறை "காசநோயை இல்லொதொழிப்பதற்கு முதலிடுவதன் மூலம் உயிர்களை காப்பாற்றுவோம்" எனும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் இன்று வவுனியா மாவட்ட காச நோய் தடுப்பு பிரிவில் விழிப்புணர்வு செயலமர்வும், அதனைத் தொடர்ந்து பொதுமக்களிற்கான விழிப்புணர்வு நடைபவனியும் முன்னெடுக்கபடவுள்ளன.

காச நோயானது ஒரு பக்ரீரியாவால் இருமல் மூலம் மற்றவருக்கு தொற்றக் கூடியது. இந்நோயும், கொரோனாவும் ஒரே மாதிரியாகவே பரவுகின்றன.

ஒருவருக்கு தொடர்ச்சியாக இருமல் இருப்பின் அது காசநோயாக இருப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது. இக்காசநோயினை சளியை சோதிப்பதன் மூலமாக அறியமுடியும். வவுனியாவை பொறுத்தவரை அனைத்து அரச மருத்துவமனையிலும் இம்முறையில் பரிசோதனை செய்வதற்கான வசதிவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உடனடியாக இதனை பரிசோதித்து அதனை கண்டு பிடித்து சிகிச்சை அளிப்பதன் மூலமாக இதனை மாற்ற முடியும். உலக சுகாதார ஸ்தாபனமானது ஒருலட்சம் மக்களில் 64 பேரிற்கு காசநோய் இருக்கலாம் என்று தெரிவிக்கின்றது.

வவுனியா மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டு 52 பேரும் 2020 ஆம் ஆண்டு 47 பேரும் இணங் காணப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டு இந்நோயினால் 08 பேரும், 2020 ஆம் ஆண்டு 07பேரும் மரணமாகியுள்ளனர்.

காசநோயை பொறுத்த வரை இலங்கையில் 2021ம் ஆண்டு 6771 பேர் இனங்காணப்பட்டுள்ளதுடன் 2020ம் ஆண்டு 500 பேர் வரை காச நோயினால் மரணமடைந்துள்ளனர் என தெரிவித்தனர்.(4-5-250-299)

# சங்கிலி அறுத்தவர்கள் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை கந்தர் உடையார் ஒழுங்கையை சேர்ந்த பெண் ஒருவர் கடந்த 3 ஆம் திகதி கொடிகாமத்திலிருந்து கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும் பொழுது முள்ளிசந்திப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த பெண்ணின் சங்கிலியை அறுத்துக் கொண்டு சென்றனர். சங்கிலியை பறி கொடுத்தவர் நெல்லியடி பொலிஸில் முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார். இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸாரால் வேறு ஒரு களவு சம்பந்தமாக மட்டுவில் பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் சங்கத்தானை பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்தனர்.

அவர்களிடம் விசாரணை செய்த பொழுது நெல்லியடி முள்ளிப்பகுதியில் சங்கிலி அறுத்ததை ஒப்புக் கொண்டனர். அத்துடன் அவர்கள் விற்பனை செய்த கடையில் சங்கிலியையும் பொலிஸார் மீட்டனர். பொலிஸார் இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி அடையாள அணி வகுப்புக்கு முற்படுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (4-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ மயமாக்கலை விரிவுபடுத்தும் அரசு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சாடல்



**(கொழும்பு)**

**நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளைக் கையாள்வதற்கான ஓர் உத்தியாக அரசாங்கம் இராணுவமயமாக்கலைப் பயன்படுத்தி வருகிறது. அது மனித உரிமைகள் மீறப்படுவதற்கு வழிவகுத் திருப்பதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்கீழ் இயங்கும் எரிபொருள் நிரப்புநிலையங்களில் இராணுவத்தினர் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை அறிவித்திருந்த நிலையில், இது குறித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

தற்போதைய அரசாங்கம் பிரச்சினைகளைக் கையாள்வதற்குரிய ஓர் உத்தியாக இராணுவமயமாக்கலை மேற்கொண்டு வருகிறது.

போரின் பின்னர் ராஜபக்ஷவின் முன்னை அரசாங்கத்தில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் இராணுவமயமாக்கல் தீவிரமடைந்தது. நல்லாட்சி அரசாங்கத்தின்போது அந்த இராணுவமயமாக்கல் நிலை நீக்கப்படவில்லை. அதுமாத்திரமன்றி 2019 ஆம் ஆண்டின் பின்னர் இராணுவமயமாக்கல். மீண்டும் தீவிரமடைந்தது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம், சட்டத்தின் ஆட்சியைப் பேணுவதில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதற்காக வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியினால் மாதாந்தம் புதுப்பித்து வெளியிடப்படுகிறது. இந்த வர்த்தமானி அறிவித்தல் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டது.

சிறைச்சாலை நடவடிக்கைகள், போதைப்பொருள் தடுப்பு, புனர்வாழ்வளித்தல் ஆகியவற்றிலும் இராணுவமயமாக்கல் இடம்பெறுவதை அவதானிக்கமுடிவதுடன், அது உரிமைகள் மீறப்படுவதற்கும் வழிவகுத்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# பூஸ்டர் தடுப்பூசி இறக்குமதிக்கு சில காலம் செல்லும்

## சுகாதார அமைச்சு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக மூன்றாவது தடுப்பூசியாக பயன்படுத்தப்பட்டு வரும் பூஸ்டர் தடுப்பூசியின் கையிருப்பு முடிவடைந்தால் அதனை மீண்டும் இறக்குமதி செய்வதற்கு சில காலம் செல்லும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் முடிந்தவரை விரைவாக பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் மத்தியில் மிகுந்த ஆர்வம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)



வேர்ள்ட் விசன் நிறுவனத்தினால் அக்கராயன் மருத்துவமனையில் அமைக்கப்பட்ட உளநல சிகிச்சை நிலையம் நேற்று கையளிக்கப்பட்டது. (படம் - சப்தசங்கரி, தேவானந்தன்)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2021 ஆண்டுக்கான
தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில்
160 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

**ரா.சோபிகா**

[யா/ மகாஜன கல்லூரி தெல்லிப்பழை]

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன்
கற்பித்த அதிபர் ஆசிரியர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மேலும் பல சாதனைகளைப் புரிய
இறைவனை வேண்டுகின்றோம்.

(10750)

**வாழ்த்துவோர்**
அப்பா, அம்மா,தம்பி மற்றும்
பெரியப்பா குடும்பத்தினர்.


Siva Yogaswami
Memorial Lecture 2022
By
**Rishi Thondunathan Swami**
**Disciple of Gurudeva**
**Sivaya Subramuniyaswami**
**Hawaii Saiva Adheenam**
**USA**
On
**"The wisdom of Yogaswami from Jaffna - Reaching all around the world"**
On
Friday 25th March 2022 at 3.00 p.m
at the Kailasapathy Auditorium,
University of Jaffna

All are cordially invited.
Kindly follow the precautionary measures for COVID 19 when participating.

Registrar,
University of Jaffna.
Sri Lanka
24.3.2022


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில் **171 புள்ளிகளைப்**
**பெற்று** எமக்கும், ஊருக்கும் கல்வி கற்ற
பாடசாலையான
யா/நெல்லியடி மெதடிஸ் மிசன் தமிழ்
கலவன் பாடசாலைக்கும்
பெருமை சேர்த்த எங்கள் குடும்பத்தின்
செல்ல மகள்

**சஜோனா ஜெயானந்தன்**

அவர்களை மகிழ்வுடன் பாராட்டி
வாழ்த்துகின்றோம். கல்வியில்
மென்மேலும் உயர்வுகளும்
சிறப்புகளும் பெற்று வாழ்வாங்குவாழ
மனதார வாழ்த்தி மகிழ்கின்றோம்.
சிறந்த பெறுபேற்றினைப் பெற
எம்மோடு சேர்ந்து ஆக்கமும்
ஊக்கமும் வழங்கிய பாடசாலைச்
சமூகத்திற்கும் ஆசிரியர்களுக்கும்
பாராட்டுக்களையும் நன்றிகளையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

(10749)


**வாழ்த்துவோர்**
[illegible] – சஞ்ஜய், தம்பி –ஆதர்ஷ்,அம்மம்மா, சித்தி,
அகிலன் சித்தப்பா, தாத்தா, அப்பம்மா, அப்பப்பா,ரூபன் சித்தப்பா , விஜி சித்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 02

### பணத்தின் அவதாரம்



இந்த பணத்தை கையில பிடிச்சி, கொஞ்சம் தள்ளி வெச்சி
யோசிச்சு பாத்தா...
அடேங்கப்பா இந்த பணத்துக்கு எவ்வளவு பெயர்கள்...
கோயில் உண்டியலில் செலுத்தினால் **காணிக்கை** என்றும்...
யாசிப்பவருக்குக் கொடுத்தால் **பிச்சை** என்றும்...
அர்ச்சகருக்குக் கொடுத்தால் **தட்சணை** என்றும்...
கல்விக் கூடங்களில் **கட்டணம்** என்றும்...
திருமணத்தில் **வரதட்சணை** என்றும்...
திருமண விலக்கில் **ஜீவனாம்சம்** என்றும்...
விபத்துகளில் இறந்தால் **நஷ்டஈடு** என்றும்...
ஏழைகள் கேட்டுக் கொடுத்தால் **தர்மம்** என்றும்...
நாமாக விரும்பி ஏழைகளுக்குக் கொடுத்தால் **தானம்** என்றும்...
திருமண வீடுகளில் பரிசாக **மொய்** என்றும்...
திருப்பித் தர வேண்டும் என யாருக்காவது கொடுத்தால் அது **கடன்** என்றும்...
திருப்பித் தர வேண்டாம் என இலவசமாகக் கொடுத்தால் அது **அன்பளிப்பு** என்றும்...
விரும்பிக் கொடுத்தால் **நன்கொடை** என்றும்...
நீதிமன்றத்தில் செலுத்தினால் **அபராதம்** என்றும்...
அரசுக்குச் செலுத்தினால் **வரி** என்றும்...
அரசுப் பொது தர்ம ஸ்பானங்களுக்கு கொடுத்தால் அது **நிதி** என்றும்...
செய்த வேலைக்கு மாதந்தோறும் கிடைப்பது **சம்பளம்** என்றும்...
தினமும் கிடைப்பது **கூலி** என்றும்...
பணி ஓய்வுப் பெற்றால் கிடைப்பது **ஓய்வூதியம்** என்றும்...
சட்டத்திற்கு விரோதமாக கையூட்டு வாங்குவதும் கொடுப்பதும் **லஞ்சம்** என்றும்...
கடன் வாங்கினால் அத்தொகைக்கு **அசல்** என்றும்...
வாங்கிய கடனுக்குக் கொடுக்கும் போது **வட்டி** என்றும்...
தொழில் தொடங்கும் போது அதற்கு **முதலீடு** என்றும்...
தொழிலில் கிடைக்கும் வருமானத்துக்கு **இலாபம்** என்றும்...
குருவிற்குக் கொடுக்கும் போது **குருதட்சணை** என்றும்...
ஹோட்டலில் நல்குவது **டிப்ஸ்** என்றும்...
இவ்வாறு பல பெயர்களில் கைமாறும் இந்தப் பணத்திற்கு
மாற்றாக வேறொன்றும் இப்புவியில் இல்லை...
இந்தப் பணம் என்ற காகிதத்தைப் பெற...
சிலர் அன்பை இழக்கின்றனர்...
சிலர் பண்பை இழக்கின்றனர்...
சிலர் நட்புகளை இழக்கின்றனர்...
சிலர் உறவுகளை இழக்கின்றனர்...
சிலர் கற்பை இழக்கின்றனர்...
சிலர் கண்ணியத்தை இழக்கின்றனர்...சிலர் மார்க்கத்தை
இழக்கின்றனர்..
சிலர் மனித நேயத்தை இழக்கின்றனர்...சிலர் வாலிபத்தை
இழக்கின்றனர்...சிலர் வாழ்க்கையையே இழக்கின்றனர்...



Nishanthan Suvekaran (Suveeharan Nisshanthan)

## பேஸ்புக், இன்ஸ்டாகிராமிற்கு தடை விதித்தது ரஷ்ய நீதிமன்றம்

(மொஸ்கோ)

மெட்டா நிறுவனத்தை தீவிர வாத அமைப்பாக அறிவித்து அந்த நிறுவனம் நடத்தி வரும் பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் சமூக வலைதளங்களுக்கு தடை விதித்து ரஷ்ய நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது.

ரஷ்யா - உக்ரேன் போரி ன்போது, மெட்டா நிறுவனம் ரஷ்ய எதிர்ப்பை நோக்கி செயல் பட்டதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மெட்டா மற்றும் பேஸ்புக் ஆகிய இரு சமூகவலைத் தள ங்களும் தீவிரவாத செயல் களை செய்வதாக ரஷ்ய அரசு தரப்பில் அந்நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (நி)

## தாய்வானில் நிலநடுக்கம்

(தைபே)

தாய்வானில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் புதிதாக கட்டப் பட்டு வரும் பாலம் இடிந்ததில் ஒருவர் காயம் அடைந்தார்.

தாய்வான் தலைநகர் தைபேயில் இருந்து சுமார் 182 கிலோ மீற்றர் தூரத்தில் நில நடுக்கம் ஏற்பட்டது.


இதனால் கட்டடங்கள், வீடுகள் குலுங்கின.

ரிக்டர் அளவு கோலில் இந்த நிலநடுக்கம் 6.7 ஆக பதிவாகி இருந்தது. (நி-5)

## ஜி-20

## ரஷ்ய

## அமெரிக்



நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை ரஷ்யாவை மாற்ற வேண்

## ஆப்கானிஸ்தானில் ப

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் 7 மாத ங்களுக்குப் பிறகு உயர் நிலை வகுப்புகளில் பயிலும் மாணவிகள் நேற்று பாடசாலைக்குச் சென்ற னர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆகஸ்ட் மாதம் தலிபான்கள்



ஆட்
பின்
கட்
பெ

## உலகில் காற்று மாசடைந்த 100 நகரங்களில் 63 நகரங்கள் இந்தியாவை சேர்ந்தவை



(டில்லி)

உலகில் மிகவும் காற்று மாச டைந்த 100 நகரங்களின் பட்டி யலில் இந்தியாவின் 63 நகர ங்கள் இடம்பெற்றுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

காற்றின் தரம் குறித்து சுவிட் சர்லாந்தின் IQ Air நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி ராஜஸ்தான் மாநில த்தின் பிவாடி நகர் முதலிடத்திலும், உத்தர பிரதேசத்தின் காசியாபாத் நகர் இரண்டாவது இடத்திலும் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள துடன், நான்காவது இடத்தில் டெல்லி உள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# 20 அமைப்பில் இருந்து ாவை விலக்கத் திட்டம்

## க்கா உட்பட நட்பு நாடுகள் பரிசீலனை



**(மொஸ்கோ)**

**ரஷ்யாவை ஜி 20 அமைப்பில் இருந்து விலக்குவதற்கான நடவடிக்கையை அமெரிக்காவும் பிற மேற்கத்திய நாடுகளும் பரிசீலித்து வருவதாக சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.**

டும் என்ற பரிந்துரையை போலந்து, அமெரிக்க அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் உலகப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுப்பதை நோக்கமாகக் கொண்டு குறித்த அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குறித்த அமைப்பில் இருந்து ரஷ்யாவை நீக்க கோருவது மேற்கிலிருந்து ரஷ்யாவிற்கு எதிராக இருக்கும் பொருளாதாரத் தடைகளை அதிகரிக்கும் என கூறப்படுகின்றது.

அத்தோடு சீனா, இந்தியா மற்றும் சவுதி அரேபியா உள்ளிட்ட பிற முக்கிய ஜி 20 நாடுகள் வீட்டோ அதிகாரம் கொண்ட நாடாக மாறக்கூடும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-5)

## பாடசாலைக்கு சென்ற மாணவிகள்



ஆட்சியைக் கைப்பற்றினர். அதன் பின்னர் அங்கு பெண்களுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டது.

இதனிடையே கொரோனா காரணமாகவும் கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. கடந்த ஒக்டோபர்- நவம்பர் மாதங்களில் பாடசாலைகள் திறக்கப்பட்ட நிலையில் 12 வயதுக்கு கீழ் உள்ள சிறுமிகள் மட்டுமே பள்ளிக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் உயர் நிலை, மேல்நிலைப் பாடசாலைகளில் பயிலும் மாணவிகள் 7 மாதங்களுக்குப் பிறகு நேற்று பாடசாலை சென்றனர். (நி-5)

## இஸ்ரேல் பல்பொருள் அங்காடியில் நடத்தப்பட்ட தாக்குதலில் நால்வர் பலி

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் தென் பகுதியில் பல்பொருள் அங்காடி ஒன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூவர் கத்தியால் குத்தி கொலை செய்யப் பட்டுள்ளதுடன் மற்றுமொருவர் தாக்குதல்தாரியால் வாகனத்தால் மோதி கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.



ஐ.எஸ் குழுவினருக்கு ஆதரவு வழங்கிய குற்றச்சாட்டில் குறித்த தாக்குதல்தாரி இதற்கு முன்னர் சிறை வைக்கப்பட்டிருந்ததாக இஸ்ரேலிய உட்துறை பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது. (நி-5)

## மரக்காலை தீ விபத்தில் 11 பேர் உயிரிழப்பு

### தெலுங்கானாவில் துயரம்

(டில்லி)

தெலுங்கானா மாநிலம் செகந்திராபாத்தில் மரக்காலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று புதன் கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வட மாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள் 100 பேர் கடையில் தங்கி வேலை பார்த்து வந்துள்ள நிலையில், குறித்த சம்பவம் காரணமாக 11 பேர் உயிரிழந்துள்ளதாகவும், அவர்களில் ஏழு பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## புடினுக்கு நேட்டோ நாடுகள் பயப்படுகின்றன

### உக்ரைன் ஜனாதிபதி குற்றச்சாட்டு



(கீவ்)

புடினுக்கு நேட்டோ நாடுகள் பயப்படுகின்றன. ரஷ்யாவுக்கு பயந்து உக்ரைனை ஏற்கமாட்டோம் என்ற உண்மையை நேட்டோ அமைப்புகள் உடனே வெளிப்படையாக கூற வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்தார்.

ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல் போர் நிறுத்தத்திற்கு சாத்தியமே இல்லை. வெறுமனே பேச்சு வார்த்தையை நீட்டித்துக் கொண்டே செல்வதால் எந்த பயனும் இல்லை.

நேற்று மட்டும் 7 ஆயிரம் பொது மக்கள் மரியுபோல் நகரில் இருந்து வெளியேற்றப்பட்டனர். 1 இலட்சம் பேர் உணவு, குடிநீர், மருந்து வசதிகள் இல்லாமல் தவித்து வருகின்றனர் என அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மூன்று கிராமங்களில் குடிநீருக்கு பாரிய தட்டுப்பாடு

## சூழல் பாதுகாப்பு குழுவினால் கண்டறிவு



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தம்பனைக்குளம், மடுக்கரை மற்றும் வேப்பங்குளம் ஆகிய மூன்று கிராமங்களிலும் குடிநீருக்குத் தட்டுப்பாடு உள்ளமை அக்கிராமங்களில் உள்ள சூழல் பாதுகாப்பு குழுக்களினால் கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் மிசிறியோ அமைப்பின் நிதி உதவியுடன் மாவட்டத்தில் 5 கிராமங்களில் சூழல் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் குறித்த கிராமங்களுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த தேசிய நிலையத்தின் சூழல் பாதுகாப்புக் குழுவினரிடம் கிராமங்களில் உள்ள சூழல் பாதுகாப்பு குழுவினர் குறித்த பிரச்சினையை முன்வைத்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் காணப்படும் பொது கிணறுகள் பாதிப்படைந்த நிலையில் காணப்படுவதோடு, அவற்றை மக்கள் பயன்படுத்தும் வகையில் சீரமைக்க வேண்டிய நிலை உள்ளதாக மடுக்கரை சூழல் பாதுகாப்பு குழுவினர் வருகை தந்த அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

குறிப்பாக நீர்ப் பிரச்சினை, அபிவிருத்திக்கு என மரங்கள் வெட்டப்பட்டுள்ளமையினால் அங்கு ஏற்பட்டுள்ள சூழல் பிரச்சினை, சட்டவிரோத மண் அகழ்வினால் ஆற்று நீருடன் கடல் நீர் கலப்பதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தெரிவித்துள்ளதோடு, விவசாயம் மற்றும் கால்நடைகளின் தேவைக்காக பயன்படுத்துகின்ற சிறிய குளத்தை புனரமைப்பது தொடர்பாக தமது முன்மொழிவுகளையும் முன்வைத்தனர்.

குறித்த கிராமங்களில் இடம்பெற்று வருகின்ற மண் அகழ்வினால் ஆற்று நீருடன் கடல் நீர் கலக்கிறது.இதனால் மக்களின் குடிநீர் உப்பு நீராக காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த கிராமங்களில் இடம் பெற்று வருகின்ற மண் அகழ்வை நிறுத்த தேசிய ரீதியில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினர். (4-5-285)

# அரசின் கொள்கைகளை மக்கள் மத்தியில் சேர்ப்பது கிராம உத்தியோகத்தர்களின் பொறுப்பு

## கிளிநொச்சி அரச அதிபர்

(கண்டாவளை)

மக்களுக்கும் கிராம உத்தியோகளுக்குமான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளவும் மக்களிடையே நல்லுறவை பேணி சிறந்த சேவையை வழங்குபவர்களாக கிராம உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள் ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முகாமைத்துவப் போட்டியில் வெற்றி பெற்ற கிராம உத்தியோகத்தர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களுக்கும் கிராம அலுவலர்களுக்குமான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளவும் மக்களிடையே நல்லுறவை பேணி அவர்களுக்கான சிறந்த சேவையினை வழங்குவதோடு ஒரு நல்ல அபிப்பிராயத்தையும் தோற்றுவிப்பதாக கிராம உத்தியோகத்தர் செயற்பட வேண்டும்

கிராம உத்தியோகத்தர்கள் மக்களுடனான நல்லுறவை பேணிக் கொள்வது மிக அவசியமாகும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களானது மக்களுக்கான சிறந்த சேவையை வழங்கும் மையங்களாக அமைய வேண்டும்.

அரசாங்கத்தின் எந்தகொள்கையாக இருந்தாலும் சரி அதை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் கிராம உத்தியோகத்தர் பொறுப்பு வாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர். என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-5-315-316)

# வீதியை புனரமைக்க கோரி வீதி மறியல் போராட்டம்



(தருமபுரம்)

பல்லவராஜன் கட்டு சந்தியிலிருந்து பாலாவி செல்லும் பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு கோரி அப்பகுதி மக்கள் வீதியை மறித்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பல மணிநேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

குறித்த பகுதிக்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஒப்பந்தகாரர் குறித்த ஒப்பந்தத்திலிருந்து விலகியுள்ளதாகவும் புதியதொரு ஒப்பந்தகாரருக்கு இத்திட்டம் வழங்கப்பட்டு ஏப்ரல் மாதம் வீதியின் புனரமைப்பு பணி முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார். அதனையடுத்து போராட்டகாரர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். (4-5-316)

# துப்பாக்கி மீட்பு



(மன்னார்)

மன்னார் மடுக்கரைக் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது.

தள்ளாடி இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பிலே குறித்த துப்பாக்கி மீட்கப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-285)



எழுவைதீவு புனித தோமையார் முன்பள்ளியின் 2022ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா நிகழ்வுகள் கடந்த 21 ஆம் திகதி முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

# கனகராயன்குள விபத்தில் ஒருவர் படுகாயம்



(நெளுக்குளம்)

வவுனியா - கனகராயன் குளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

காரும் துவிச்சக்கரவண்டியும் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது. இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-299)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(கண்டாவளை)

புளியம்பொக்கனை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள கருக்காய் குளம் கமக்கார அமைப்பின் 2022 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு உழவனூர் பொது நோக்கு மண்டபத்தில் கமநல உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறும். (5-4-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 280 | 250 | 350 | 300 |
| தக்காளி | 180 | 120 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 140 | 80 | 100 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 200 | 160 | 250 | 250 |
| பூசணி | 60 | 80 | 70 | 80 |
| புடோல் | 150 | 150 | 150 | 120 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 150 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 150 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 150 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 140 | 100 | 140 |
| பயற்றங்காய் | 200 | 140 | 100 | 150 |
| லீக்ஸ் | 140 | 120 | 150 | 150 |
| பீற்றூட் | 140 | 100 | 140 | 150 |
| கறிமிளகாய் | 250 | 150 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 1500 | 1000 | 1200 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | - | 200 |
| கீரை - 1 பிடி | 70 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 140 | 120 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 160 | 200 | 200 |
| வெங்காயப்பூ | - | 140 | 140 | 280 |
| முள்ளங்கி | 60 | 100 | 70 | 160 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 15 | 20 | 30 |
| ஈரப்பலா | - | - | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 21.03.2022-07.10.2023

## வருகிறது ராகு பதினொன்றில் வருமானம் இனிமேல் திருப்திதரும்

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**(மிருகசீரிடம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் வரை)**

**பெயரின் முதல் எழுத்துக்கள்: க, கா, கி, கு, ஙு, ச, கே, கோ உள்ளவர்களுக்கும் வருகிறது.**

**ராகு பதினொன்றில் வருமானம் இனிமேல் திருப்தி தரும்**

**மிதுன இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், மார்ச் 21 ஆம் திகதி முதல் 11 ஆம் இடமான இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதேநேரம் கேது பகவான் உங்கள் இராசிக்கு 5 ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் அந்த இடத்தில் சஞ்சரித்து அங்குள்ள நட்சத்திர பாதசாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழங்குவார்கள்.

**வரவைப் பெருக்கும் ராகு, சுபச்செய்தியை வழங்கும் கேது**

11 ஆம் இடமான இலாப ஸ்தானத்திற்கு வரும் ராகு, பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்வார். வியாபாரத்தில் இதுவரை ஏற்பட்ட சரிவை ஈடுகட்டுவீர்கள். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிக்கு கடனுதவி கிடைக்கும். படித்து முடித்தவருக்கு வேலைவாய்ப்பு உண்டு. பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் பிள்ளைகளின் கல்யாண வாய்ப்பு கைகூடும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பூர்வீக சொத்துக்களை விற்று விட்டுப் புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். இதுவரை எதிர்நீச்சல் போட்ட நீங்கள், இனி முன்னேற்றம் காண்பீர்கள்.

**சூரிய சாரத்தில் ராகு சஞ்சாரம் (21.3.2022 முதல் 22.5.2022 வரை)**

கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். வீடு தேடி நல்ல தகவல்கள் வரலாம். ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். உடன்பிறப்புகள் வழியில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். வியாபாரப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். அண்ணன், தம்பிகளின் ஆதரவோடு எண்ணிய காரியத்தை எளிதில் முடிப்பீர்கள். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்குகள் உங்களுக்கு சாதகமாக முடியும். தொழில் வளர்ச்சிக்காக செய்த புது முயற்சிகள் வெற்றி தரும்.

**சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சாரம் (23.5.2022 முதல் 28.1.2023 வரை)**

பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகள் வழியில் சுபச்செய்திகள் வந்து சேரும். இல்லத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்கும். தங்கு தடைகள் தானாக விலகும். பழைய நகைகளைக் கொடுத்துவிட்டுப் புதிய நகைகளை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்ப ஒற்றுமை பலப்படும்.

பயணங்கள் பலன் தருவதாக அமையும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் வாய்ப்பு உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், இடமாற்றமும் வரலாம். நீண்ட நாட்களுக்கு முன்பு செய்த உத்தியோக முயற்சி இப்பொழுது கைகூடும்.

**கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சாரம் (29.1.2023 முதல் 7.10.2023 வரை)**

அச்சுவினி நட்சத்திரக் காலில் கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். புதிய திருப்பங்கள் ஏற்படும். அருளாளர்களின் ஆலோசனையால் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். வெளிநாட்டுத் தொடர்பால் இலாபம் உண்டு.

பிள்ளைகள் வழியில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதை ஏற்றுக்கொண்டு சரிசெய்து விடுவீர்கள். கொடுக்கல்- வாங்கலில் சுமுக நிலை ஏற்படும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கும் சந்தர்ப்பம் கைகூடிவரும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகளில் சமரச முயற்சி வெற்றிபெறும். உத்தியோக மாற்றம் உறுதியாகலாம்.

**குரு சாரத்தில் கேது சஞ்சாரம் (21.3.2022 முதல் 25.9.2022 வரை)**

விசாக நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொகை வரவும் திருப்தி தரும். கொடுத்த கடன்கள் வசூலாகும். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதி குரு என்பதால், நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரலாம். 'குறைந்த




சம்பளத்தில் வேலை பார்க்கிறோமே, நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வருமா?' என்று யோசித்தவர்களுக்கு இப்பொழுது நல்ல தகவல் கிடைக்கும். நிரந்தர வருமானம் கிடைப்பதற்கான வழிபிறக்கும். நீண்ட நாள் நோய் அகலும்.

**ராகு சாரத்தில் கேது சஞ்சாரம்(26.9.2022 முதல் 3.6.2023 வரை)**

சுவாதி நட்சத்திரக் காலில் ராகுவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். புகழ்மிக்கவர்களின் ஒத்துழைப்பால் தொழில் வளம் காண்பீர்கள். ஆரோக்கியம் சீராகும். முன்னோர்கள் கட்டி சிதலமடைந்த கோவில்களை மீண்டும் பராமரிக்கும் முயற்சி கைகூடும். பற்றாக்குறை அகல எடுத்த புது முயற்சி வெற்றிபெறும். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் விலகுவர்.

இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். பிள்ளைகளின் திருமணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சொத்து விற்பனையால் தன இலாபம் உண்டு. பொதுவாக இக்காலத்தில் திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நிறைவேறும்.

**செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சாரம்(4.6.2023 முதல் 7.10.2023 வரை)**

சித்திரை நட்சத்திரக் காலில் செவ்வாயின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோக வாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்து பேசியவர்களை இனம் கண்டுகொள்வீர்கள். வாழ்க்கைத் தேவை பூர்த்தியாகும். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். சொத்து விற்பனையால் இலாபம் உண்டு.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் இரண்டு முறை குருப்பெயர்ச்சி நடைபெறுகிறது. ஏப்ரல் 13 ஆம் திகதி மீன இராசிக்கு குரு பெயர்ச்சியாகிறார். அவர் உங்கள் இராசிக்கு 10இல் வருவதால் பதவி மாற்றம் உருவாகும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்படலாம். செய்யும் தொழில்களில், ஏதேனும் ஒரு தொழிலை கொடுக்கும் சூழ்நிலை உருவாகலாம். 22.4. 2023 அன்று மேஷத்திற்கு குரு பெயர்ச்சியாகிறார். அதன் பார்வை பலத்தால், சகோதர ஒற்றுமை ஏற்படும். பிள்ளைகளின் கல்வி மற்றும் கல்யாணம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

16.3.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் பெயர்ச்சியாகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். இனி அஷ்டமத்துச் சனி விலகி விட்டது. எனவே, குறுக்கீடு சக்திகள் அகலும். கொள்கைப்பிடிப்போடு நடக்க இயலும். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். தலைமைப் பதவி கூடத் தானாக வந்து சேரலாம். கௌரவம், அந்தஸ்து உயரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக உங்கள் செல்வநிலை உயரும். புதிய பாதை புலப்படும். கணவன் - மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடு அகலும். வாழ்க்கைத்துணையின் உடல்நலம் சீராகும். பிள்ளைகளுக்கான கல்யாண முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு வரும். நேர்மறைச் சிந்தனைகளை வ்ளர்த்துக்கொள்வது நல்லது. ஏகாதசி விரதமும், விஷ்ணு வழிபாடும் இனிய பலன் தரும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

# அறிவு வந்தது !



(நேற்றைய தொடர்ச்சி)

இதை முடிவு செய்வதும் நீங்களே! எனவே அவர்கள் அதையும் சந்தோஷத்துடன் ஒப்புக் கொண்டார்கள். அப்போது ஜமீன்தாரர் சில பணியாளர்கள் உங்களை ஏமாற்ற முற்படலாம். உங்களைப் புகழ்ந்து தவறான வழியில் செல்லலாம்.

வேலை செய்யாமலே வேலை செய்ததாகக் கூறி உங்களைக் கையெழுத்துப் போடச் சொல்வார்கள் அதற்கெல்லாமல் மசியாமல் அவர்கள் எழுதிக் கொடுப்பதை நீங்கள் கையெழுத்துப் போட்டு எனக்கு அனுப்புவதாகக் கூறி எனக்கு அனுப்பியும் விடுங்கள்.

நானும் அவற்றைப் பார்த்து திருப்தி அடைகிறேன். வேலையைச் சரியாகச் செய்யவில்லை என்றால் அவர்களை வேலையிலிருந்து நீக்கி விடலாம். நீங்களும் தாட்சண்யம் காட்ட வேண்டாம்" என்றார். அதுகேட்டு நான்கு அதிகாரிகளும் திகைத்துப் போனார்கள். அவர்களுக்கு ஜமீன்தாரர் என்ன நினைக்கிறார் என்பது புரிந்துவிட்டது.

அதிகாரங்களைக் கொடுப்பது போலக் கொடுத்து முடிவில் பிடுங்கிக் கொண்டு விட்டாரே! அவர்களால் எதுவும் பேச முடியவில்லை. அவர் கூறுவது போல நடப்பதாகக் கூறிச் சென்றார்கள்.

ஒரு மாதகாலம் ஜமீன்தாரர் கூறியபடியே நடந்தது. பணியாளர்கள் தம் வேலை போய் விடுமோ என பயந்து தினமும் தம் வேலைகளை முழுமையாகச் சரிவர செய்து குறிப்புகளை எழுதி அனுப்பினார்கள். அதிகாரிகளும் அவை சரியா, தவறா என எழுதிக் கையெழுத்திட்டு ஜமீன்தாரருக்கு அனுப்பினார்கள். ஊதியம் வேலையைப் பொறுத்தே என்றதால் அலுவலகங்கள் சுறுசுறுப்பாக இயங்க ஒவ்வொருவனும் தன் வேலையை மட்டும் செய்தான்.

அதிகாரிகளின் வீட்டு வேலைகளைச் செய்யவில்லை. ஜமீன் வேலைகளெல்லாம் சரிவர நடந்து பண வசூலும் பாக்கி இராமல் நடைபெறலாயிற்று. இது கண்டு சிவகிரி ஜமீன்தாரர் மகிழ்ந்து புவனகிரிக்குப் போய் ஞானசேகரரைக் கண்டு "தீபன் உண்மையிலேயே மேதை தான். அவனை நான் என் திவானாக நியமித்துக் கொள்ள விரும்புகிறேன்."என்றார்.

ஞானசேகரரோ "அது நடக்காது ஏற்கனவே நான் உனக்கு தீபன் கர்வம் கொண்டவன் என்று கூறினேனே. அது நினைவில்லையா?" என்றார்.

ஜமீன்தாரரும் "நன்றாக நினைவிருக்கிறது. அதைப் போக்கவும் வழி இருக்கிறது. கன காரணயத்தில் கங்காநாதர் என்ற யோகி இருக்கிறார். அவர் எல்லா சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவர். அவரிடம் தீபனை அனுப்புங்கள். தீபன் அவரோடு ஒரு வாரம் இருந்தால் திருந்துவான்"என்றார்.

ஞானசேகரும் "சரி. ஆனால் தீபனை இதற்கு சம்மதிக்க வைப்பது உன்வேலை என்றார்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




கைகேயி இராமனுக்காக அனுப்பி வைத்த மரவுரியை ஏற்று உடை மாற்றிக் கொண்டான், களம் நோக்கிச் செல்லும் போர் வீரனாக மாறினான்; தவக் கோலத்தில் தமையனைக் கண்ட இலக்குவன், கண் கலங்க நின்றான்; சுமத்திரை அவனைத் தட்டி எழுப்பினாள்.

"தமையனைக் கண்டு நீ கண்ணீர் விடுகிறாய்; அதனால் நீ அவனுக்கு அந்நியன் ஆகிறாய்; நீயும் புறப்படு; கோலத்தை மாற்று; வில்லை எடுத்து அவன் பின் செல்க! மரவுரி நான் தருகிறேன்; நீ உடுத்திக் கொள்; அதுதான் உனக்கு அழகு தரும்"

"இராமன் வாழும் இடம் தான் உனக்கு அயோத்தி; அவன் தான் உனக்கு இனித் தந்தை. சனகன் மகள் சீதை தான் உனக்கு இனி அன்னை, காலம் தாழ்த்தாதே; புறப்படு; இங்கு நிற்பதும் தவறு" என்றாள்.

மரிவுரி தரித்து இலக்குவனும் இராமன்பின் வந்து நின்றான். "இது என்ன கோலம்?" என்று வியப்புடன் கேட்டான்.

"அரச உடை அங்கு ஆகாதே" என்றான். "உன்னை யார் காட்டுக்கு ஏகச் சொல்லியது? வரம் எனக்குத்தானே தவிர உனக்கு அல்லவே"

"நான் உடன் வரக் கூடாது என்று அன்னையர் யாரும் [illegible] [illegible]வில்லையே" என்றான்.

அவனும் தன்னுடன் வருதலை விரும்பாது, அவனைத் தடுத்து நிறுத்த முயன்றான்.

"உனக்கு இங்கே கடமைகள் மிக்கு உள்ளன; அன்னையர்க்கு ஆறுதல் கூற உன்னையன்றி யார் இருக்கிறார்கள்?"

"தந்தை நிலை கெட்டு உலைகிறார்; அவருக்கு என் இழப்பை ஈடு செய்ய நீ இருக்க வேண்டாவா?"

"பரதன் ஆட்சிக்குப் புதிது; வயதில் என்னைவிட இளைஞன், அவனுக்குத் துணையாக யார் இருப்பர்?"

"யான் இங்கிருந்து ஆற்ற வேண்டிய கடமைகள் உள்ளன; எனக்காக நீ இரு; என் வேண்டுகோளை ஏற்று நட" என்று அறிவுரை கூறினான்.

மூத்தவன் இந்த உரைகளைப் பேசுவான் என்று இலக்குவன் எதிர்பார்க்கவில்லை; இந்தக் கொடுமையான சொற்களைக் கேட்டுக் கடுந்துயரில் ஆழ்ந்தான்; விம்மி அழுதான்.

"ஏன் என்னை உன்னிடமிருந்து பிரிக்கிறாய்? உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? என்னை நான் விரும்பும் இடத்தில் வாழ விடு"

"மீனும் குவளையும் நீரில்தான் வாழும்; ஏனைய உயிர்களும் அவை அவை வாழும் இடம் இவை எனத் தேர்ந்து எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன; கட்டிய மனைவியை நீ விட்டு ஒதுங்க முடியாது; ஒட்டிய உறவுடைய என்னையும் நீ வெட்டித் தள்ள முடியாது; "எட்டப்போ" என்று கூற முடியாது! நீ இல்லாமல் நான் வாழ முடியாது; அன்னை சீதையும் உன்னை விட்டுப் பிரிந்து வாழ முடியாது; இது எங்கள் நிலை". (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பறவைக்கும் கடவுள்தான் உணவளிக்கிறார். ஆனால் அவர் அதை கூட்டிற்குள் அடைப்பதில்லை. – *ஹாலண்டு*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச, பொது அமைப்புகள் களமிறங்க வேண்டும்!

ஒரு முகநூல் பதிவில் நம் நாட்டின் சமகால சூழமைவை விளக்கும் பொருட்டு புகைப் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

அதில் தருமர், அருச்சுனன், வீமன், நகுலன், சகாதேவன் ஆகியோரின் படங்களைக் காண்பித்து இவர்கள் பஞ்சபாண்டவர்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனையடுத்து, ஆளும் ராஜபக்ஷ குடும்பத்தினரின் புகைப்படங்களைக் காட்சிப்படுத்தி, இவர்கள் **பஞ்சம் வர ஆண்டவர்கள்** என எழுதப்பட்டிருந்தது.

ஆக, நாட்டின் பொருளாதாரம் என்பது மிக மோசமாகிவிட்டதென அனைவராலும் உணரப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடி நிலையினின்றும் இலங்கை மீள்வதாயின், குறைந்தது மூன்று வருடங்களாவது ஆகும் என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

தவிர, பஞ்சத்தின் முதற்படி இது என்பதால், இன்னும் சில மாதங்கள் கடந்துபோக, பஞ்சம் பசி பட்டினி தலைவிரித்தாடும் என்பது சர்வநிச்சயம்.

எனினும் அதுதொடர்பில் அரச தரப்பு இம்மியும் கவலை கொள்ளப்போவதில்லை.

நாட்டு மக்கள் வறுமையில் வாடுவது கண்டும் நெஞ்சு பதறாதவர்கள் ஆட்சியில் இருந்தால், மீட்சி இல்லை என்பதை வரலாறு நமக்குக் கற்பித்துள்ளது.

எனவே வறுமை நிலையை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று யாரேனும் நம்பினால், அதைவிட மடமைத்தனம் வேறுஎதுவுமாக இருக்க முடியாது.

எனவே மிகமோசமான நிலைமையை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கையில் அந்தப் பேரவலத்தில் இருந்து நம் மக்களைப் பாதுகாக்க வேண்டுமாயின், இக்கணமே மக்களைத் தயார்படுத்துவது கட்டாயமாகிறது.

ஆம், ஏற்பட்டுவரும் வறுமையில் இருந்து மீளவேண்டுமாயின், உணவுப் பயிர்ச்செய்கையில் பொதுமக்களை ஈடுபடுத்த வேண்டும்.

அதாவது சிறுதானிய வகைகள் மற்றும் மரவள்ளி உள்ளிட்ட கிழங்கு வகைகளின் உற்பத்திகளில் நம் மக்களை ஈடுபடுத்துவது அவசியமாகும்.

இதற்கும் மேலாக, வீட்டுத்தோட்டச் செய்கையில் மக்களை ஊக்குவிப்பதும் மிகப்பெரும் பயன்தரும்.

இவையாவற்றுக்கும் மேலாக, ஒரு காலத்தில் எமது மக்களின் உணவுத் தேவையில் கணிசமான வகிபங்கை ஆற்றி நின்ற பனைசார் உணவு உற்பத்திகளை ஊக்குவிப்பதைப் பெருமெடுப்பில் செய்தாக வேண்டும்.

ஆம், பனாட்டு, புளுக்கொடியல், ஒடியல் ஆகியவற்றின் உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் எமது உணவுத் தேவையை ஈடுசெய்வதில் பனைசார் பண்டங்களின் பங்கை அதிகரிக்க முடியும்.

ஆகவே இதுவிடயத்தில் அந்தந்த பிரதேச செயலகங்களின் தலைமையில் விவசாய அமைப்புகள், கால்நடை அமைப்புகள், பனைசார் நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என அத்தனை அரச மற்றும் பொது அமைப்புக்களும் களத்தில் இறங்கி, பொதுமக்களை ஊக்குவிப்பதுடன் தாமும் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபட்டால், எமது மக்களை பஞ்சத்தில் இருந்து நிச்சயம் பாதுகாக்க முடியும்.

### புலிகளை தோற்கடித்த பின்னருங்கூட

# தமிழ் மக்களின் மனதை வெல்வதற்கு எந்த அரசும் நடவடிக்கை எடுக்கவில்லை

### சர்வகட்சி மாநாட்டில் சித்தார்த்தன் எம்.பி

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளை தோற்கடித்த பின்னருங்கூட, தமிழ் மக்களின் மனதை வெல்வதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து வந்த அரசுகள் மேற்கொள்ளவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் அவர்களால் சர்வகட்சி மாநாட்டில் வாசிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் கடிதம் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் நிலைமையைப் பற்றி ஆழமான பொருளாதாரப் பகுப்பாய்வைச் செய்தால், நாட்டின் தற்போதைய பொருளாதார அவலத்திற்கு கோவிட் பெருந்தொற்று மாத்திரம் காரணம் அல்ல என்பதை நீங்கள் தெளிவாகக் காணலாம்.

பல தசாப்தங்களாக நாட்டில் நிலவும் இன நெருக்கடியை, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் கொள்கை, அணுகுமுறை மற்றும் தவறான நிர்வாகக் கையாளுகையே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு உண்மையான காரணமாகும்.

சுயாட்சி அதிகாரத்திற்கான தமிழ் மக்களின் அபிலாசைக் கோரிக்கைக்கு முன்னதாகவே எமது நாட்டின் அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சிறந்த அரசியல் தீர்வை அடைந்திருக்க முடியும்.

எவ்வாறாயினும், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் சித்தாந்தத்தால் உந்தப்பட்ட அரசாங்கங்கள் அரசியல் பிரச்சினைக்கு இராணுவ தீர்வையே தேர்ந்தெடுத்தன. உண்மையில், அதுவே இன்றைய பேரழிவுகரமான கடன் நெருக்கடிக்குள் நம் நாட்டைத் தள்ளிவிட்டுள்ளது.

நீங்கள் வரலாற்றை ஆழமாக ஆராய்ந்தால், பல தசாப்தங்களாக சிங்கள பௌத்த பெரும்பான்மை சித்தாந்தத்துடன் நடாத்தப்பட்ட யுத்தமானது இன்று எமது நாட்டின் அனைத்து சமூக மக்களினதும் தோள்களில் ஒட்டுமொத்த பொருளாதாரச் சுமையையும் சுமத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளை தோற்கடித்த பின்னருங்கூட, தமிழ் மக்களின் மனதை வெல்வதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து வந்த எமது நாட்டு அரசாங்கங்கள் மேற்கொள்ளவில்லை.

மாறாக நீங்கள் பாதுகாப்புச் செயலாளராக செயற்பட்ட அப்போதைய அரசாங்கம், தமிழ் மக்களை யுத்தத்தில் வெற்றி கொண்டுவிட்டோம் என்கின்ற மனப்பான்மையுடன் தொடர்ந்தும் எமது நாட்டை ஆட்சி செய்து தமிழ் மக்களை அந்நியப்படுத்தியது.

அதுவே, அந்நேரத்தில் பெரும் ஆற்றலையும் விருப்பத்தையும் கொண்டிருந்த புலம்பெயர்ந்த தமிழர்கள் நம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பதை தடுத்திருந்தது என்றார்.

(ம-18,33,104)

### நாட்டில் இன்றைய தினமும்

# இரு கட்டங்களாக மின்வெட்டு அமுலாகும்

(கொழும்பு)

நாட்டில் இன்றைய தினமும் சுழற்சிமுறையில் இரு கட்டங்களாக நீண்ட மின்வெட்டு அமுல்படுத்தப்பட உள்ளது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இன்று மின்வெட்டினை அமுல்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, A முதல் L வரையிலான வலயங்களில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையிலான காலப்பகுதியினுள் தலா 3 மணி நேரமும் 20 நிமிடங்களும் மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரையான காலப்பகுதியினுள் தலா ஒரு மணி நேரமும் 40 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் இன்றைய தினம் P முதல் W வரையான வலயங்களில் காலை 8.30 மணி முதல் 5.30 மணி வரையான காலப் பகுதியினுள் 4 மணிநேரமும் 30 நிமிடங்களும் மாலை 5.30 மணிமுதல் இரவு 11 மணிவரை ஒரு மணி நேரமும் 50 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(ம)


# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 25 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** கூடு வெந்தபுலவு ஆகிய இடத்திலும் மின்சாரம் தடைப்படும்.

# சத்திய தரிசனம்

## பகவானிடம் சரணாகதி



❖ "சில வேளைகளில் நெருக்கடிகள் கூடிக் கொண்டும் வரலாம். பதட்டமடையாதே. கண்ணை மூடி முழுநம்பிக்கையுடன் இதய பூர்வமாக " எல்லாம் உமது சங்கல்பமே" அதன்படி நடக்கட்டும் என்று பிரார்த்திக்கவும். முழுமையான சரணாகதிக்கு நான் செவி சாய்த்து நல்லதையே ஓர் அற்புத நிகழ்வாக முடிப்பேன். நீ என் மீது முழு நம்பிக்கை வைக்க வேண்டும்."

**சுவாமியுடனான எனது அனுபவங்கள்**

❖ நான் சுவாமியை 2006 ஆம் ஆண்டிலிருந்து தீவிரமாக சுவாமியை நேசிக்க தொடங்கினேன். அன்றிலிருந்து சுவாமியின் அருளுரைகள், வழிகாட்டல்கள் அனைத்தையும் தீவிரமாக எனது வாழ்க்கையில் கடைப்பிடித்து வருகின்றேன். 2006 ஆம் ஆண்டில் இருந்து 9.2.2014 வரை அதிக அளவான சுவாமியின் அற்புதங்கள், அனுபவங்கள் என்னிடம் புதைந்து இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் இங்கு குறிப்பிட முடியாது. [illegible] இருந்த சில உண்மைகளை கட்டாயம் வெளிப்படுத்த வேண்டிய தேவை [illegible]து.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 26

| நுவரெலியாமாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012 | | |
|---|---|---|
| பிரதேசச்செயலகம் | தமிழர் | முஸ்லீம் |
| கொத்மலை | 40842 | 6872 |
| ஹங்குரங்கெத்த | 11921 | 137 |
| வலப்பனை | 37679 | 781 |
| நுவரெலியா | 163362 | 5266 |
| அம்பகமுவ | 156396 | 4596 |
| நுவரெலியா மாவட்டம் | 410200 | 17652 |

## நுவரெலியா மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்திற்கு 16 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப் பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி நுவரெலியா மாவட்டம் 8 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

நுவரெலியா மாவட்டத்தில் 5பிரதேச செயல கங்களுக்கு உட்பட்ட 491 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 711,644 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 88,956 ஆக நிர்ண யிக்கப்பட்டிருந்தது.

நுவ்ரெலியா மாவட்ட செயலகத்தில் 23.11.2017 காலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 27 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் படிகேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 7 பிரேர ணைகள் உட்பட மொத்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 35 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 34 பரிந்துரைகளை குழு பெற்றுக் கொண்டது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாள ரால், மத்திய மாகாணத்தின் நுவ ரெலியா மாவட்டத்திற்கு 16 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப் பட்டனர். இதன்படி நுவரெலியா மாவட்டம் 8 மாகாண சபை உறுப் பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

அதிகமான பிரேரணைகளின் பரிந்துரைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் செய்ய வேண்டிய முறை பற்றி கூறியிருந்தாலும் அவற் றுள் சில சரியான தகவல்களைத் தரவில்லை. அவற்றுள் பல பரிந்துரைகளில் பிரதேச செயலக பிரிவுகளின் எல்லைகளையும் பழைய பாரா ளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை), உள்ளூர் அதிகாரசபை எல்லைகளையும் அடிப்படையாக கொண்டு எல்லை நிர்ணயம் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருந்தன.

அவற்றில் ஒன்று பல் உறுப்பினர் தொகுதி வழங்கப்பட வேண்டும் என்றும் முமமொழிந் திருந்தது. மேலும் பரிந்துரைக்கப்பட்ட தொகு திகளுக்கு இடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்த தாலும், மேலும் பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் எடுக்க முடியவில்லை.

அது மட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத் தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத் தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லை களையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவு களை) போன்றவற்றை விட பிரதேச செயல கங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத் திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்க ளுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைப் கூறுபோடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது.

எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது. இவை தவிர தேர்தல் தொகுதிகளின் சனத்தொகை எண்ணிக்கையில் ஒத்திசையாத தன்மையைக் குறைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட சராசரி சனத்தொகையின் விலகலின் வரம்புகளுக் குட்பட்டதாகவும், 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற் கொண்டுள்ளது.

பல பிரேரணைகள் சிறுபான்மை இனத்தின் (தமிழர்கள்) உரிமைகளைப் பாதுகாப்பதைப் பற்றி பரிந்துரை செய்திருந்தது. தமிழர்கள் 4-5 தேர்தல் தொகுதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பல் உறுப்பினர் தேர்தல் தொகுதி உட் பட தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் படி கோரி இருந்தன. அவற்றில் சில நுவரெலியா நகர பிர தேசத்திற்கு பல் உறுப்பினர் தொகுதிகள் வழங் கப்பட வேண்டும் என்றும் முமமொழிந்திருந்தன.

பல் உறுப்பினர் தேர்தல் தொகுதிகளை உருவாக்காமல் அந்தந்த சமூகத்தின் பிரதிநிதி த்துவத்தை பாதுகாக்கும் வகையில் தொகுதிகள் உருவாக்க முடியுமென்பதை குழு அவதானித்தது. மேலும் பல் உறுப்பினர் தேர்தல் தொகுதியில் பல் வேறு சமூகங்களின் உறுப்பினர்கள் தெரிவு செய் யப்படும் வாய்ப்பினையும் அப் பரிந்துரைகள் மூலம் அறிய முடியவில்லை.

எனவே இதனை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்தாலும் எதிர்பார்க்கும் பிரதிபலனை மற்றைய இனத்த வர்கள் பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே குழு 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட தேர்தல் தொகுதிகளில் அந்தந்த சமூக விருப் பங்களை அந்த பிரதேசங்களில் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க முடிவுசெய்தது. பதினைந்து (15) சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை, ஏனென்றால் அவை எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக் கவில்லை மற்றும் குழுவின் பொறுப்பு ஆணைக ளுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும் போது, சரித்திர பிரசித்தி பெற்ற பெயர் இடப்பட வேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத் தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப் படையில் இடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இது சில பிரேரணைகளில் பரிந்துரைத்த பெயர்க ளுடன் ஒத்துப் போகிறது.

சுருக்கமாகக் கூறினால் 1 பிரதேச செயலகம் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 2 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 2 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப் பட்டும், தொகுதிக்கான சராசரி மக்கள் தொகைக்கு −8.5% மற்றும் + 7.2% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக் கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து நுவரெலியா மாவட்டம் 8 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்க ப்பட்டுள்ளது.

அவை, ஹங்குராங்கெத்த (131), வலப்பனை (118), நுவரெலியா (39), கொத் மலை (93), தலவாக்கலை (24), அகரபத்தனை (23), ஹற்றன் (20), மஸ்கெலிய (43) என்பனவாகும். அடைப் புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணி க்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்ட வணை (f2) இல் காட்டப்பட்டுள்ளது.

| அட்டவணை (f2) - நுவர எலிய மாவட்ட தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும் | | | | | |
|---|---|---|---|---|---|
| தேர்தல் தொகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லிம் | மற்றவை | மொத்தம் |
| ஹங்குராங்கெத்த | 76444 | 11921 | 137 | 26 | 88528 |
| வலப்பனை | 61688 | 24690 | 669 | 62 | 87109 |
| நுவரெலியா | 32785 | 52715 | 3903 | 881 | 90284 |
| தலவாக்கலை | 8634 | 77900 | 1063 | 129 | 87726 |
| கொத்மலை | 52439 | 35777 | 6867 | 265 | 95348 |
| அகரபத்தனை | 6023 | 74721 | 572 | 56 | 81372 |
| ஹற்றன் | 7647 | 76805 | 3777 | 273 | 88502 |
| மஸ்கெலிய | 36393 | 55671 | 664 | 47 | 92775 |
| நுவரெலியா மாவட்டம் | [illegible] | 410200 | 17652 | 1739 | 711644 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்...)

## புத்தாண்டுக்கு...

தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், புதிய பாதீடு ஒன்றை முன்வைப்பதற்கும் நிதியமைச்சர் இதன்போது இணக்கம் வெளியிட்டுள்ளார். (ம)

## பெறுமதிசேர்...

ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிதிச் சேவை வழங்கலுக்கு பெறுமதிசேர் வரியானது 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிக்கப்படவுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழு, நேற்று முன்தினம் கூடியபோது 2002ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

பாதீட்டின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரிக் கொள்கை முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தவும் இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. (ம)

## ரணிலிடம் பகிரங்...

கப்ரால் நாட்டின் தற்போதைய நிலைக்கு கடந்த அரசாங்கமே காரணம் என குற்றம் சாட்டினார்.

இதற்கு பதில் வழங்கிய ரணில் விக்கிரமசிங்க, பெரும்பாலான கட்சிகள் நிராகரித்த சூழ்நிலையில், நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து தனது கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்காகவே தான் சர்வகட்சி மாநாட்டிற்கு சமுகமளித்ததாக தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினை குறித்து கலந்துரையாடுவதற்காகவே தாம் வருகை தந்ததாகவும் பொருளாதார நெருக்கடி குறித்து ஆலோசிக்கவே இந்த மாநாடு கூட்டப்பட்டதாகவும் குற்றச்சாட்டு முன்வைத்து விளையாடும் இடம் அல்ல என்றும் கடுமையாக சாடினார்.

இதையடுத்து, குறுக்கிட்டு பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மனம் வேதனைப்படும் வகையில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் தான் மன்னிப்பு கோருவதாக குறிப்பிட்டார். (ம)

## ரணில் எழுப்பிய...

மாளிகையில் நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் சுவாரஸ்யமான வாக்குவாதம் இடம்பெற்றது.

ரணில், சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் வினவினார். அதற்கு பதிலளித்த அமைச்சர் பசில், அவர்கள் இன்னும் அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை என்றார்.

குறுக்கிட்ட ரணில், அப்படியாயின் எந்த ஆவணத்தின் அடிப்படையில் பேச்சு நடத்துகின்றீர்கள். ஜனாதிபதி அவர்களே! நாணய நிதியத்தின் அதிகாரிகள் இருந்தால் இவ்விடத்துக்கு அழையுங்கள் எனக் கேட்டார்.

பதிலளித்த பசில், என்னைவிட உங்களுக்கு நன்றாகத் தெரியும். முதலில் எங்களுக்கு அறிக்கையை சமர்ப்பிக்கமாட்டார்கள். ஒரு வரைபைத்தான் தருவார்கள் என்றார்.

குறுக்கிட்ட ரணில், அறிக்கை இல்லையென்கின்றீர்கள். தற்போது வரைபு கிடைத்துள்ளது என்கின்றீர்கள். அப்படியாயின் அதனைத் தாருங்கள் என்றார்.

பதிலளித்த பசில், அறிக்கை உங்களுக்கு வேண்டுமா? வரைபு உங்களுக்கு வேண்டுமா? எனக் கேட்டார்.

எனினும், அறிக்கையோ, வரைபோ எனக்கு வேண்டாம். அதனை பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்துங்கள் என ரணில் கேட்க, அதற்கு மறுப்புத் தெரிவித்த பசில் ராஜபக்ஷ, அதனை தன்னால் சமர்ப்பிக்க முடியாது எனக் கூறிவிட்டார். (ம)

## நெருக்கடிக்கு...

ஜனாதிபதி மாளிகையில் நேற்று சர்வகட்சி மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கான முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்த்து இந்த மாநாடு கூட்டப்பட்டது. கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் எழுத்து மூலமாகவும் வாய்மொழியாகவும் தங்கள் முன்மொழிவுகளை சமர்ப்பித்தனர்.

நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் தங்களின் அதிகபட்ச பங்களிப்பையும் அர்ப்பணிப்பையும் சர்வகட்சி மாநாட்டிற்கு எதிர்காலத்தில் வழங்குவதாகவும் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், தற்போதைய பொருளாதார நிலைமையை மாநாட்டில் முன்வைத்தார்.

சர்வகட்சி மாநாடு நேர்மையான ஒரு முயற்சி ஆகும். இதில் எந்தவித அரசியல் இலாபமோ குறுகிய நோக்கமோ கிடையாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை மீளாய்வு செய்வதற்கு பொறிமுறை ஒன்றை உருவாக்கி பயனுள்ள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக குழுவொன்றை அமைக்க முடியுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

## வடக்கில் முதலிட...

கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடுவதன் முக்கியத்துவத்தை நேற்று ஜனாதிபதியை சந்தித்த அமெரிக்க அரச திணைக்களத்தின் அரசியல் விவகாரம்தொடர்பான உதவிச்செயலாளர்திருமதி விக்டோரியா நூலண்ட சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இன்று (நேற்று) முற்பகல் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட விடயங்கள், அதன் முன்னேற்றம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடல் தொடர்பிலும் ஜனாதிபதி, திருமதி நூலண்டிடம் தெரிவித்தார்.

அதுபற்றி தனது பாராட்டைத் தெரிவித்த உதவிச் செயலாளர் கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடுவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார். புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்த தான் ஆர்வமாக உள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, வடமாகாணத்தின் அபிவிருத்தியில் முதலீடு செய்யுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் பசுமைத் தொழில்நுட்பத்தை இந்நாட்டிற்கு அறிமுகப்படுத்தவும் சைபர் மற்றும் தகவல் தொழிநுட்பத்துறைகளின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திருமதி நூலண்ட் தெரிவித்தார். இந் நாட்டின் கல்வி வசதிகள் தொடர்பில் அவதானம் செலுத்திய உதவிச் செயலாளர், தனியார் துறையினரின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதன் மூலம், உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்த முடியும் என சுட்டிக்காட்டினார். (ம)

## '74...

ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்திற்கு எதிராக ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கங்களும் மாணவர் அமைப்புகளும் மகளிர் அமைப்புகளும் பங்கேற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் எதிர்ப்பு போராட்டம் காரணமாக விஜேராம சந்தியில் இருந்து நுகேகொட நோக்கி செல்லும் ஹைலெவல் வீதி ஊடாக போக்குவரத்து முழுவதுமாக தடைப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொருட்களின் தொடர் விலையேற்றத்தைக் கண்டித்தும் அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்துவரும் நிலையில், ஜே.வி.பியும் நேற்று இப்போராட்டத்தை முன்னெடுத்தது. (ம)

## நெருக்கடி நிலை...

துள்ளார்.

இந்த மாநாடு அரசியல் ஆதாயம் பெறும் முயற்சி என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை அவர் நிராகரித்தார்.

நேற்றைய மாநாட்டை புறக்கணித்துள்ள அரசியல் கட்சிகளை எதிர்காலத்தில் இடம்பெறும் இவ்வாறான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். (ம)

## ராஜபக்ஷ அரசு...

ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நிமல் லான்சாவின் வெளியேற்றமானது, சாதாரண சம்பவம் அல்ல. அரசிலிருந்து பெருமளவானோர் வெளியேறவுள்ளனர் என்பதற்கான ஆரம்பகட்ட சமிக்ஞையே அது. அரசு மீது பலர் அதிருப்தியில் உள்ளனர்.

அவர்கள் விரைவில் வெளியேறுவார்கள். எனவே, இந்த அரசு விரைவில் கவிழும். ஜனாதிபதியின் சர்வகட்சி மாநாடு, ஏமாற்று அரசியலின் ஓர் அங்கமாகும்" இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ம)


தன நிதானய
திகதி - 2022.03.23
சீட்டிழுப்பு இலக்கம் - 745
I 01 37 46 68
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2022/03/23
சீட்டிழுப்பு இலக்கம் 4715
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
0 1 0 3 4 5 2

மெகா பவர்
திகதி 23/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1063
H 14 11 35 45 55

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1227
சிம்மம் 2 7 3 6 2 3

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1692
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 23.03.2022
தினம் புதன்
R 35 47 52 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூ 54,111,221/-

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.23
சீட்டிழுப்பு இல: 3853
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,746,500/-
வெற்றி இலக்கங்கள்
15 41 55 65 D
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,553,533/-
திகதி 23.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3404
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 19 28 31 57 துலாம்
6 1 4 2 5 6 0
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,717,520/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 12 01 14 19 77
சீட்டிழுப்பு வாரம் 868
2022.03.23 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 224,989,519/-
Web : www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1822
சீட்டிழுப்பு திகதி 23.03.2022
வெற்றி இலக்கங்கள் 04 11 30 59 Y
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 32,839,240/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.23
சீட்டிழுப்பு இல: 1518
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,751,020/-
வெற்றி இலக்கங்கள் 34 53 57 62 L
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

இலங்கையில் 90 வருட காலமாக இயங்கிவரும் நிதி நிறுவன மானது யாழ். மாவட்டத்தில் தனது கிளை ஒன்றினை புதிதாக ஆரம்பிக்கவுள்ளது. இந்த நிறுவனத்தில் நிரந்தர அடிப்படைச் சம்பளத்துடன் கூடிய பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- கிளை முகாமையாளர் (முழுநேரம், நிரந்தரம்)
  அடிப்படைச் சம்பளம் 35,000/= - 70,000/=
- வெளிக்கள முகாமையாளர் (முழுநேரம், நிரந்தரம்)
  அடிப்படைச் சம்பளம் 20,000/= - 40,000/=
- வெளிக்கள ஆலோசகர் (முழுநேரம்/ பகுதிநேரம்)
- நிதி சேகரிப்பு அலுவலர் (முழுநேரம்/ நிரந்தரம்)
- அலுவலக உதவியாளர் (முழுநேரம்/ நிரந்தரம்)

EPF, ETF வழங்கப்படும்.
தகைமை : G.C.E(O/L) பூர்த்தி செய்திருத்தல் போதுமானது.

நீங்கள் பகுதி நேரமாகவும் இங்கு பணிபுரிய முடியும். (அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், வெளி மாவட்டத்தில் பணிபுரிவோர், முன்னாள் நிதியியல் சேவையில் ஈடுபட்டோர், போக்குவரத்து சேவையிலுள்ளோர், தனியார் துறையில் ஈடுபடுவோர் மற்றும் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் போன்றோர் ஈடுபட முடியும்.

உங்கள் விண்ணப்பங்களை jobsvac.lk@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும் அல்லது 075 050 1989/ 072 346 5014 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அனுப்பி வைக்கவும். (C-4041)


## மாகாண...

விக்டோரியா நூலண்ட் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்திக்க எடுத்துள்ள நடவடிக்கையை வரவேற்பதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உடனான சந்திப்பைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகவும் கடினமான மற்றும் முக்கிய தருணத்தில் தாம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாகவும் இந்த தருணத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்திடம் உதவிபெற இலங்கை அரசாங்கம் எடுத்த முடிவு துணிச்சலான நடவடிக்கை என விக்டோரியா நூலண்ட் குறிப்பிட்டார். (ம)


# வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

தொடர்பு
021 222 9286
(10758)

# மணமகள் தேவை

1967இல் பிறந்த பிரான்ஸ் நாட்டுப் பிரஜாவுரிமையுள்ள திருமணமாகாத நற்பண்புள்ள குருகுல மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. நட்சத்திரம் – கேட்டை 4ம் பாதம் செவ்வாய்/கேது 12இல், லக்கினத்தில் சந்திரன், சனி 5இல் சூரியன், புதன், வியாழன், 9இல் மணமகன் இலங்கை வந்து மணமகளை அழைத்துச் செல்வார். தாரமிழந்தவர்களும் கருத்தில் கொள்ளப்படுவர். (10757)

தொடர்பு:- 070 253 0305 சகோதரன்

## Rani Farm

Reg:-VW/FIN/BR/I/22/2018
Pannagam, chulipuram, Jaffna.
0773322433

| | |
|---|---|
| 1 நாள் ஊர்க்கோழி குஞ்சு | - 100/= |
| 2 கிழமை ஊர்க்கோழி குஞ்சு | - 160/= |
| 1 நாள் வான்கோழி குஞ்சு | - 350/= |
| 1 நாள் வெள்ளடியன் குஞ்சு | - 300/= |
| காடை குஞ்சு | - 35/= |

ஒப்பந்த அடிப்படையில் 1 மாத குஞ்சுகள் வளர்த்து தரப்படும். (10751)

077 332 2433
பண்ணாகம்


# மரண அறிவித்தல்



## திரு. கந்தையா சிவஞானம் பிரபாகரன்

( B.Sc (Hons), PGDE, M.A (Tamil), Ph.D (Schol.)

ஆசிரியர் – தி/ நாமல்வத்தை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை,
முன்னாள் ஆசிரியர் – தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி,
தி/சல்லி அம்பாள் மகா வித்தியாலயம், தி/ கலைமகள் மகா வித்தியாலயம்
நிர்வாகி - " குருஷேஸ்திரா " கல்விநிலையம்

திருகோணமலை உவர்மலையைச் சேர்ந்த திரு. கந்தையா சிவஞானம் பிரபாகரன் அவர்கள் நேற்று (23.03.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கந்தையா - சிவஞானம் (ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி) - காலஞ்சென்ற சரோஜினிதேவி சிவஞானம் (சைவப்புலவர், இந்து தர்மாசிரியர், சைவசித்தாந்த பண்டிதர் - M.A. சைவசித்தாந்தம், கலாபூசணம்) தம்பதியரின் அன்பு மகனும் சுபதினி (உதவி அதிபர் - உவர்மலை விவேகானந்தா கல்லூரி), சதாநிதி (நிர்வாக உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கிண்ணியா), கஜேந்திரன் (தலைமை கணக்காளர் - மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), நிரஞ்சனா ( Group Accountant, St. John, Newzealand) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜரட்ணம் கோகுலதாசன் (விவசாயப் பணிப்பாளர் - மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு), வேலுப்பிள்ளை தவநாதன் (ஆசிரியர் - சென். மேரிஸ் கல்லூரி, திருகோணமலை), குமுதினி கஜேந்திரன் (பிரதம கணக்காளர் - வடமாகாண திறைசேரி), சிவச்செல்வம் தயாளன் (Associate Director - Transport at Blubarn Consulting Engineer, Newzealand) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரவீன்ராஜா (Electrical Engineer - Capital Maharajah Group), பிருதிவிராஜன் (Design Architecture - மொறட்டுவ பல்கலைக்கழகம்), பிரகாஷ்னி (மருத்துவபீடம் - யாழ். பல்கலைக்கழகம்), பிரபோதினி, சுருதிவாசினி (மருத்துவ பீடம் - யாழ். பல்கலைக் கழகம்), டினேசன், சோபிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனன்யன் இளஅழகனின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.03.2022) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-4046)

" தேவி கடாட்சம் "
இல. 42 A, தேன்தமிழ் வீதி,
உவர்மலை, திருகோணமலை.
077 491 1792
077 554 4622
தகவல் :- குடும்பத்தினர்


# விற்பனைக்கு


சட்டறிங் வேலைக்கு பயன்படுத்தும் Jack முட்டு G.I (500 NOS)
(10756)

077 071 1111

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# நெஞ்சம் நெகிழும் முதலாம் ஆண்டு



அமரர் உயர்திரு

## தம்பிப்பிள்ளை கணேசலிங்கம்

உரிமையாளர் - தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ். ( TKT நல்லெண்ணெய் )

திதி : பூர்வபக்க ஏகாதசி [2022.04.12]

மண்மகிழ : 1954.05.24
கண்நெகிழ : 2021.03.24

நாட்கள் முன்னூற்று அறுபத்தைந்து
தான் கடந்ததுவோ!
நீங்கள் மண்ணுலகம் நீங்கி
விண்ணுலகம் சென்று!
அப்பா! உங்கள் உருவம் தான் மண்ணுலகை
விட்டு பிரிந்தது.
ஆனால் என்றும் எம்மனங்களில்
உணர்வாய் கலந்துள்ளீர்கள்!
எம் நினைவுகள் அழியும் வரை உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு விலகாது.
எம் சுவாசக்காற்றில் நீக்கமற நிறைந்துள்ள அப்பா!
நீங்கள் என்றும் எங்களை வழிநடத்துங்கள்
அப்பா! நீங்கள் இறைவனின் கமலப்பாதங்களில்
பெரும் பேறு பெற்றுய்ய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.
(10755)
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org